Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

த பெனின்சுலா பார்மசி



சகல விதமான மருந்துவகைகள், பால் மா வகைகள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு அவசியமான பொருட்கள் என்பவற்றை நியாயமான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

த பெனின்சுலா பார்மசி
51s, ஆஸ்பத்திரி வீதி (O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம்.

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | புரட்டாதி- 09 | ஹிஜ்ரி 1428 | சஃபான் 20 (25.09.2005) ஞாயிற்றுக்கிழமை | இதழ்:360

# சுனாமி நிதியில் அரசாங்கம் பெரும் மோசடி; கணக்கு தணிக்கை அறிக்கையில் அம்பலம்!

கொழும்பு —

சுனாமி மீளமைப்புக்கான சர்வதேச நிதியைப் பயன்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் பாரிய மோசடிகளில் ஈடுபட்டிருப்பதை அரசாங்க கணக்குத் தணிக்கைத்துறை அம்பலப்படுத்தியுள்ளதுடன்-

மொத்த சர்வதேச நிதியில் 13.5 வீதம் மட்டும்தான் முக்கிய துறைகளின் மீளமைப்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளது.

சுனாமி தாக்குதல் நடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முதல் ஜூன் 30 ஆம் திகதி வரையிலான சேத மதிப்பீடு மற்றும் கட்டுமான விபரங்களை உள்ளடக்கிய இடைக்கால அறிக்கையை கணக்குத் தணிக்கைத்துறை நாடாளுமன்றில் தாக்கல் செய்துள்ளது.

உள்ளூர் மற்றும் சர்வதேச நிதி மேலாண்மையில் முறைகேடுகள், சுனாமி நிவாரணப் பொருட்களை உள்நாட்டுக்குள் அனுப்புவதில் விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கற்ற அனுமதி முறைகள், கட்டுமானப் பணிகளுக்கான பொருட்கள் திருடப்பட்டமை உள்ளிட்டவை அந்த அறிக்கையில் அம்பலப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச நிதியாக 1168.8 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்தது. இதில் 158.34 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே பயன்படுத்தப் பட்டுள்ளது.

மீன் வளத்துறைக்கு 8.2 வீதமும், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுக்கு 12.3 வீதமும், வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கு 11.2 வீதமும், வாழ்வாதாரங்களுக்கு 24.5 வீதமும், சுகாதாரத்துக்கு 13.7 வீதமும், கல்விக்கு 12.8 வீதமுமாக இந்தத் தொகை செலவிடப்பட்டுள் ளது. ஓகஸ்ட் 17 ஆம் திகதி உள்நாட்டில் திரட்டப்பட்ட மொத்த நிதியில் 37 வீதம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் நிகழ்வு குறித்த நடைமுறைகள் அறிவிப்பு!

யாழ்ப்பாணம் —


பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவித்த யாழ். பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழு, இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்தி முடிக்க பின்பற்றவேண்டிய நடைமுறைகளையும் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வன்று பகல் 12 மணியுடன் அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் யாவும் தமது நிறுவனங்களை மூடி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ள வசதி செய்யவும். வியாபார நிலையங்கள், (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் ஆணையாளருக்கு ஓய்வூதியம் இல்லையாம்!

### பகிரங்கமாகவே பொருமுகிறார்



கொழும்பு —

ஓய்வுபெறும் வயதைக் கடந்தும் தனக்கு இதுவரை ஓய்வூதியத்தை அரசாங்கம் வழங்கவில்லையென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க (வயது 63) தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

எனக்கு வேறுவழி எதுவும் தெரியவில்லை. இந்தத் தேர்தலையும் நான் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. 3000 ஆண்டுகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்கள் மீதான கெடுபிடிகளை இராணுவத்தினர் கைவிட வேண்டும்!

## கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி வேண்டுகோள்



யாழ்ப்பாணம் —

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் மீனவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

துள்ளனர். எனவே இராணுவத்தினர் கெடுபிடிகளை உடன் நிறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்

## இளைஞர் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் நேற்றிரவு 7.45 மணியளவில் இனந்தெரியாதோரால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். மட்டக்களப்பு அந்தோனியார் வீதியில் அமைந்துள்ள ஆராதனா தையல்கடை உரிமையாளரே சுட்டுக் கொல்லப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திடீரென ஒளி வீசிய திருகோணமலை கடல்!

திருகோணமலை —

திருகோணமலை நகரத்துக்கு அண்மையாகவுள்ள பெரியகடை கடற்பகுதியில் நேற்றிரவு கடல்நீர் பிரகாசமாக ஒளிவீசியதால் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகச்


## திடீரென ஒளி வீசிய திருகோணமலை கடல்!

திருகோணமலை ——

திருகோணமலை நகரத்துக்கு அண்மையாகவுள்ள பெரியகடை கடற்பகுதியில் நேற்றிரவு கடல்நீர் பிரகாசமாக ஒளிவீசியதால் பொதுமக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வியப்புடன் பார்த்தனர்.

இந்தச் சம்பவம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி வேண்டுகோள்



யாழ்ப்பாணம் ——

அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் மீனவர்கள் மீதும், பொதுமக்கள் மீதும் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக பொதுமக்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். எனவே இராணுவத்தினர் கெடுபிடிகளை உடன் நிறுத்த வேண்டும் என யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படையின் துணைப்படை நேற்று தற்காப்பு ஒத்திகை!





முல்லைத்தீவு ——

தமிழீழ கடற்படை துணைப்படை யின் தற்காப்பு ஒத்திகை நேற்று வடமராட்சி கிழக்கில் நடைபெற்றது. சிறப்புப் பயிற்சி ஆசிரியர் பூவண்ணனின் ஒழுங்கமைப்பில் பெருமளவிலான துணைப்படையினர் இந்த கடற்கரைகாப்பு தற்காப்புத் தாக்குதல் ஒத்திகையில் கலந்துகொண்டனர்.

கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம், (12 ஆம் பக்கம் பார்க்க)

# கரைக்குத் திரும்பிய மீனவரை விரட்டியடித்த படைத்தரப்பினர்!

யாழ்ப்பாணம் ——

வடமராட்சி - இன்பருட்டி, சக்கோட்டை, சுப்பர்மடம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் சென்றுவிட்டு மீண்டும் கரைக்குத் திரும்பமுற்பட்டபோது இராணுவத்தினர் அவர்களைக் கைகளால் தாக்கியதுடன் கற்களை வீசி மிரட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்று அதிகாலை மீனவர்கள் தமது படகுகளில் கடலுக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)


**ஈழத் தமிழர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்கள் அல்ல.**
**தமக்கென தமது பிரதேசத் தில் அரசொன்றை நிறுவி**
**நடைமுறைப்படுத்திவரும் செயல்வீரர்கள்.**
**முழங்குவோம் செப்ரெம்பர் - 30 இல்**


# கிழக்குப் பகுதி முகாம்களுக்கு இராணுவ தளபதி திடீர் விஜயம்!

கொழும்பு ——

மட்டக்களப்பு - வெலிக்கந்த- மின்னேரியா ஆகியபகுதிகளுக்குத் திடீரென விஜயம் ஒன்றை மேற்கொண்ட இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட இராணுவத்தினருக்கான சகல வசதிகளும் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குள் வழங்கப்படும் என்று உறுதியளித்தார்.

நேற்றுமுன்தினம் இராணுவ உயரதிகாரிகள் சகிதம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட 23 ஆவது டிவிசனின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மின்னேரியா, (12 ஆம் பக்கம் பார்க்க)


APC ஆனந்தா பிறைவேற் கிளினிக்

எமது சேவைகள் 1.வீடுகளுக்குச் சென்று நோயாளிகளைப் பார்வையிடல் 2. பெண் நோயாளர்கள் பெண் வைத்தியரிடம் ஆலோசனை பெறும் வசதி (தினமும் மாலை)

தொலைபேசி: 021-222 8144

(C/4385) 173, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

ஆலோசனை நேரம்:
(திங்கள் - சனி) காலை 6.00- இரவு 9.00 வரை
ஞாயிறு காலை 6.00 - காலை 10.00
மாலை 5.00 - இரவு 9.00



# நமது ஈழநாடு

## மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்படும் கலை - இலக்கிய போட்டிகள்

நமது ஈழநாடு பத்திரிகையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி கலை - இலக்கியப் போட்டிகளை நடத்துவதற்கு தீர்மானித்திருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

### போட்டிகளுக்கான விதிகள்

**சிறுகதை மற்றும் கவிதைப்போட்டி**

- படைப்புக்கள் யாவும் படைப்பாளியின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்புக்கள் நிராகரிக்கப்படும்.
- சிறுகதை யாவும் தெளிவான எழுத்தில் எழுதப்பட்டோ தட்டச்சு செய்யப்பட்டோ இருத்தல் வேண்டும். கையெழுத்தில் 7 பக்கங்களுக்குள்ளும் தட்டச்சில் 6 பக்கங்களுக்குள்ளும் இருப்பது நல்லது.
- கவிதைகள் மரபுக்கவிதையாகவோ அல்லது புதுக்கவிதையாகவோ இருக்கலாம். எதுவானாலும் 20 முதல் 50 வரிகளுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்கள் யாவும் சமகால சமூகவியல் - வாழ்வியல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவையாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இந்தப் போட்டிகளில் நமது ஈழநாடு நிறுவன ஊழியர்கள் எவரும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி**

மேற் பிரிவு

தலைப்பு – தமிழ் மாணவர்களின் கல்வியும்... வெகுசனத் தொடர்பு ஊடகங்களும்.

மத்திய பிரிவு

தலைப்பு – தமிழ் மாணவர்களும் வாசிப்புப் பழக்கமும்

### நிபந்தனைகள்

- கட்டுரைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் அனுப்பும் போது பாடசாலையில் கற்கும் தரம் குறிப்பிடப்பட்டு அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- கட்டுரைகள் ஆகக்குறைந்தது 1500 சொற்களுக்கு குறையாமலும் 2000 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.
- கட்டுரையை தேர்ந்தெடுப்பதில் நடுவர் குழுவினது தீர்ப்பே இறுதியானது.

ஆக்கங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 25.09.2005

போட்டிக்கான ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரிகள்:

கலை இலக்கிய கட்டுரைப்போட்டி<br>"நமது ஈழநாடு"<br>267 நாவலர் வீதி<br>யாழ்ப்பாணம்.

நமது ஈழநாடு பணிமனை<br>யாழ்.சாலை<br>கிளிநொச்சி.

# திலீபனின் உண்ணாவிரதத்தில் கூட்டுறவாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்

தியாகி தீலிபனின் 18ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் யாழ். குடாநாடு முழுவதும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் கூட்டுறவாளர்களும் இதில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து பல.நோக்கு.கூட்டுறவுச் சங்கங்களும் தங்களது சங்க தலைமை அலுவலகம், கிளைகள் முன்பாக சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரித்தும், நினைவுப் பந்தல்களை அமைத்தும் தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு அஞ்சலி செலுத்துமாறும் எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்பி நிகழ்வுகள் சிறப்புற நடைபெற ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் பல.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் முன்னின்று இதனைச் செயற்படுத்துமாறும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கனகலிங்கம் கேட்டுள்ளார்.

தியாகி திலீபனின் இறுதிநாள் நிகழ்வுகளாக அடையாள உண்ணாவிரதம், கலை நிகழ்வுகள் போன்றன அந்தந்தக் கோட்டங்களில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. இதில் அனைத்து பணியாளர்கள், பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தீவக கோட்டத்தில் திலீபன் நினைவு தினம்

யாழ்ப்பாணம்

தியாகதீபம் லெப்.கேணல் திலீபனின் பதினெட்டாவது ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வழமைபோல் புளியங்கூடல் முத்துமாரி அம்மன் ஆலய சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

தீவக மக்கள் அனைவரையும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு தேசிய எழுச்சிப் பேரவை தீவக கோட்டத்தினர் அறிவித்துள்ளனர்.

Sethu
STUDY SITE FOR VISUAL CULTURE
ஓவிய இரசனை
விளக்கப் படங்களுடன் கூடிய விரிவுரைத் தொடர்
யாருக்கு?
ஓவியம்பற்றி, அதன் வரலாறு, இன்றைய போக்குகளை அறிந்து கொள்ள ஆர்வம் உடைய சகலருக்கும்
எங்கே?
405, பருத்தித்துறை வீதி, நல்லூர். (நல்லூர் சிவன் கோவிலுக்கு முன்பாக)
காலம்?
20 மணித்தியாலங்கள் (வார இறுதி நாட்களில்)
எப்போது?
15.10.2005 மாலை 3.00 மணி
கட்டணம்?
1500/=
மேலதிக விபரங்களுக்கு 0777774015
ஆர்வமுடையோர் 05.10.2005இக்கு முன்னர் தமது சுய விபரக் கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்
செயலாளர், சேது, 82 கச்சேரி கிழக்கு ஒழுங்கை யாழ்ப்பாணம்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், சதா, விவேக் மற்றும் பலர்நடித்த
அந்நியன்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நாகதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
இன்னும் சில தினங்கள் மட்டும்...!
மணிகண்டன், சிம்ரன், ஜெய்ஆகாஷ் நடித்த
கிச்சா வயது 16
அடுத்த வெளியீடு!
சரத்குமார், வடிவேல் நடித்த
சாணக்யா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
28 ஆம் திகதி வரை
நியூ புகழ் -எஸ்.ஜே.சூர்யா, நிலா
அன்பே ஆருயிரே
29 ஆம் திகதி முதல்
சூர்யா, அஸின் நடித்த
கஜினி
பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
சிறிகாந்த், சோனியாஅகர்வால், மற்றும் பலர் நடித்த
ஒரு நாள் ஒரு கனவு
காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)



டிஜிற்றல் போட்டோ கொப்பி
A4 - கறுப்பு வெள்ளை - 3.00 ரூபா
A4 - கலர் - 40.00 ரூபா
ஸ்ரீ மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லப்
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4609)




- தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்
- சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
- தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம்
- யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்
- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்
- வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்
- வலி. கிழக்கு வட பகுதி ப.நோ.கூ.சங்கம்
- கட்டைவேலி – நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
- புலோலி ப.நோ.கூ.சங்கம்
- வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்
- பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்
- உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்
- தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்
- அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்
- சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்
- மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்
- பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்
- சங்கானை ப.நோ.கூ.சங்கம்
- காரைநகர் ப.நோ.கூ.சங்கம்
- ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்கம்
- அனலைதீவு ப.நோ.கூ.சங்கம்
- நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம்
- புங்குடுதீவு – நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்
- வேலணை ப.நோ.கூ.சங்கம்
- யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை
- யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்
- யாழ். மாவட்ட நுகர்ச்சி விவசாய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

(சி-4661)

# பிரதமர் - ஜனாதிபதித் தேர்தலில் வென்றால் 20 ஆயிரம் வேலைவாய்ப்பு வழங்கப்படும்!

## மங்கள சமரவீர கூறுகிறார்



கொழும்பு—

ஜனாதிபதி தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் சார்பில், அதிரடியாக வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுவருகின்றன.

இது குறித்து மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார ஒருங்கிணைப்பாளர் மங்கள சமரவீர கருத்துத் தெரிவிக்கையில் -

மஹிந்த ராஜபக்ஷ - ஜனாதிபதியானால் எதிர்வரும் 2006 ஆம் ஆண்டில் பொதுத்துறை நிறுவனங்களில் 20 ஆயிரம் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும்.

வேலையற்ற பட்டதாரிகள், இளைஞர்கள் 8 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும். 3,10,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையிலான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

கடந்த 2004ஆம் ஆண்டு தேர்தலின்போது, ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது தேர்தல் அறிக்கையில், 41 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும் என்று உறுதிமொழி அளித்திருந்தது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் ஏற்கனவே 30,010 பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. விரைவில் மேலும், 10,407 பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படும்.

இந்த நாட்டின் இளைஞர் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டு வருகிறார் மஹிந்த ராஜபக்ஷ. குறிப்பாக 1980 ஆம் ஆண்டுகளில் மற்றும் 1990 ஆம் ஆண்டுகளில் இந்த நாட்டின் அப்பாவி இளைஞர்கள் கொல்லப்பட்டபோது, அவர்களுக்காக குரல் கொடுத்தவர் மஹிந்த ராஜபக்ஷ.

அரச நிறுவனங்களான மின்சாரசபை, மக்கள் வங்கி, துறைமுக நிர்வாகம் உள்ளிட்ட 12 துறைகள் தொடர்பாகத் தனது கொள்கைள் என்ன என்பதை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தவேண்டும்.

இந்த நிறுவனங்களை தனியார் மயமாக்கலுக்கு உட்படுத்தாமல் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்வோம் என்று மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நாட்டின் தனியார் ஊடகங்கள் பக்கச் சார்புடன் நடந்துகொள்கின்றன். ஐக்கிய தேசியக் கட்சியையே அவை ஆதரிக்கின்றன. தனியார் வானொலி ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 32 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு 9 நிமிடங்கள் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மற்றொரு வானொலி நிர்வாகமும் 22 நிமிடங்களை ரணிலுக்கும், 16 நிமிடங்களை மஹிந்தவுக்கும் அளித் தது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றும் 46 நிமிடங்களை ரணிலுக்கும், 33 நிமிடங்களை மஹிந்தவுக்கும் கூறியுள்ளார்.

அரச மற்றும் தனியார் ஊடகங்களின் தேர்தல் பிரசார பணிகளைக் கண்காணிப்பதற்கான குழுவை தேர்தல் திணைக்களம் அமைக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐ.தே.கட்சியில் மீண்டும் அரசரட்ணம் சசிதரன் இணைவு

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர்களில் ஒருவரான அரசரட்ணம் சசிதரன் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருந்த இவர் - மீண்டும் அந்த கட்சியில் இணைந்துள்ளதாக ஐ.தே.க.தலைமைப்பேச்சாளர் தெரிவித்தார்.

வீ.இராமநாதன் என்பவர் ஏற்கனவே மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அடுத்த மாத நடுப்பகுதியில் தொடங்கவுள்ளது.

மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலையால், ரணில் விக்கிரமசிங்க ஒரு கூட்டத்தில் மட்டுமே கலந்து கொண்டு உரையாற்றுவார் எனக் கூறப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன இந்த மாவட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு தொகுதி (இரட்டை) அப்துல் லத்தீப் மற்றும் அரசரட்ணம் சசிதரன், கல்குடா தொகுதி எம்.புறுக்கான், பட்டிருப்பு தொகுதி வீ.இராமநாதன் ஆகியோர் தொகுதி வாரியாகவும் செயல்படுவார்கள் என்று தெரியவந்துள்ளது.

# சேதுகால்வாய்த் திட்டம் குறித்து ஆய்வு செய்ய நிபுணர்குழு அமைப்பு

கொழும்பு—

இந்திய அரசின் சேதுக்கால்வாய்த்திட்டம் குறித்து ஆய்வு செய்ய, நிபுணர் குழுவை அரசாங்கம் அமைத்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளர் நிமால்சிறிபால டி சில்வா நேற்று முன்தினம் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது -

சேதுகால்வாய் திட்டத்தால் அரசு உண்மையிலேயே மிகவும் கவலை கொள்கிறது. நீரோட்ட மற்றும் கடல்வெப்ப நிலை ஆகியவை பாதிக்கப்படுவதுடன், கடல்வாழ் உயிரினங்களின் வாழக்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். இது மீனவர்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை -சேதுகால்வாய் திட்டத்துக்குப் பொதுவாக எதிர்ப்புத் தெரிவித்துள்ள அரசு, வல்லுநர் குழுவினர் எந்த அம்சத்தின் கீழ் தங்களது ஆய்வுகளை மேற்க்கொள்ளப் போகிறார்கள் என்பது உள்ளிட்ட விபரங்களைத் தெரியப்படுத்தவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூவர் கட்டுப் பணத்தை செலுத்தினர்

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்கள் தேர்தல் திணைக்களத்தில் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க சார்பிலும், ஐக்கிய சோசலிசக்கட்சியின் வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய சார்பிலும் நேற்றுமுன்தினம் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தேசிய முன்னணி சார்பில் விமல் ஹேனகே ஏற்கனவே தனது கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்- 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணத்தைச் செலுத்தவேண்டும். சுயாதீன வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபாவைச் செலுத்தவேண்டும் எனத் தேர்தல் திணைக்களம் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பத்தொன்பது கோரிக்கைகளை முன்வைத்து தபாலக ஊழியர்கள் தொழிற்சங்க நடவடிக்கை

## இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு—

பத்தொன்பது கோரிக்கைகளை முன்வைத்து, தபால் ஊழியர்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒன்பது தபால் சேவை தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். பல வருடங்களாக தமக்குரிய பிரச்சினைகள் தீர்க்கப்படாதுள்ளதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தில் பெருமளவு பதவி வெற்றிடங்களும், சம்பள முரண்பாடுகளும் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ள தபால்சேவை தொழிற்சங்கப் பொதுச்செயலாளர், அதிகரித்துவரும் சனத்தொகைக்கு ஏற்ப தபால் சேவையும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் எனவும், அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்துவதில்லையெனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## தேர்தல் சட்டங்களை மீறும்

# அச்சக உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

கொழும்பு—

தேர்தல் சட்டங்களை மீறும் அச்சக உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறும் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் மற்றும் மற்றையவர்களைக் கேவலப்படுத்தும் வகையில், வெளியீடுகளை வெளியிடுகின்ற அச்சகங்களை சுற்றிவளைத்து தேடுதல் நடத்துவதுடன், நாடு பூராவும் வேலைத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்குப் பொலிஸ் தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன் ஆரம்பகட்டமாக நாடுபூரா அமைந்துள்ள அச்சகங்களின் பெயர்விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலக பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து அச்சகங்கள் தொடர்பான விபரங்கள் - பொலிஸ் நிலைய மட்டத்தில் சேகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் அச்சக உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனாமியில் இறந்தோருக்கும் வாக்காளர் அட்டைகள்

கொழும்பு—

சுனாமி அனர்த்தத்தில் இறந்தோருக்கும் வாக்காளர் அட்டைகள் தயாரிக்கப்படும் என்று, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியதாவது -

சுனாமி அனர்த்தத்துக்கு முன்பாக வாக்காளர் பதிவு பணிகள் நிறைவடைந்துவிட்டன.

தற்போதைய தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் அதன் அடிப்படையிலேயே தயாரிக்கப்படும், இறந்தவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் வாக்காளர் அட்டைகள் தயாரிக்கப்படும்.

வாக்காளர் அட்டை விநியோகிப்பின்போது, இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனோர் விவரம் சேகரிக்கப்பட்டு, அந்த அட்டைகளில் சிறப்புக் குறியீடு செய்யப்படும்.

இதில் குளறுபடிகள் இருக்கும் நிலையில் காவல்துறை உதவியுடன் விசாரணை நடத்தி முடிவு எடுக்கப்படும் என்றார்.

# சுவிஸில் இன்று எழுச்சி விழாவும் 'போரும் சமாதானமும்' நூல்வெளியீடும்

கொழும்பு—

தமிழீழத் தாயகத்தின் பெருவிருட்ச விதைகளாய், களமாடி விதையான மாவீரர்களை நினைவில் சுமக்கும் எழுச்சி விழா, சுவிஸில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளை வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கை - இந்திய அரசுகளின் கூட்டுச் சதிக்குப் பலியான லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட 12 வேங்கைகள், இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கு எதிராக அகிம்சைப்போர் புரிந்து விதையான லெப்.கேணல் திலீபன், முதல் களப்பலியான பெண் போராளி 2 ஆவது லெப். மாலதி, மூத்த உறுப்பினர் கேணல் சங்கர், இலங்கை அரசின் சதியில் பலியான லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகிய மாவீரர்களின் நினைவை நெஞ்சில் சுமக்கும் நிகழ்வு சுவிஸில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த எழுச்சி விழா நடைபெறும் மண்டபத்தில் விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விளக்கம் கூறும் தமிழீழ மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் - 'போரும் சமாதானமும்' அரசியல் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மஹிந்தவின் வழக்கை விசாரித்த நீதிபதி இடமாற்றம்; சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்பு

கொழும்பு—

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சுனாமி நிவாரண நிதி மோசடி வழக்கை விசாரித்த கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிபதி சரத்சி.கருணாரட்ண இடமாற்றம் செய்யப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


மஹிந்த ராஜபக்ஷவின் அம்பாந்தோட்ட கணக்கு - மோசடி வழக்கில் மஹிந்தவின் வங்கிக் கணக்குகளை சோதனையிடுவதற்கு அனுமதி அளித்தவர் சரத் சி.கருணாரட்ண.

முக்கிய ஊழல் வழக்குகளின் விசாரணையை நடத்தி வரும் நிலையில் அவரை இடமாற்றம் செய்திருப்பது அரசியல் உள்நோக்கம் கொண்டது என்றும், இந்த இடமாற்றத்தை உடனே நிறுத்தி வைக்குமாறும் தலைமை நீதிபதி சரத் என் சில்வாவுக்கு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை தொடர்பாகத் தலைமை நீதிபதி சரத் என்.சில்வாவுக்கு, வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளர் ஜிராஸ் நூருதீன் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இந்த இடமாற்றம் குறித்து கருத்து தெரிவித்த நீதித்துறை ஆணையகத்தின் செயலாளர் ஜயதிலக - நீதிபதி கருணாரட்னவுக்கு எதிராக 2 முறைப்பாடு மனுக்கள் வந்தன. அவர் கோட்டை நீதிமன்ற நீதிபதியாக இருப்பதால், அது குறித்து விசாரணை நடத்த இயலவில்லை. முறையீடு செய்வர்களில் ஒருவரான வெளிநாட்டுப் பெண்மணி ஒருவர் ஏன் இது தொடர்பில் விசாரணை தொடங்கவில்லை என்று கேள்வி எழும்பியுள்ளார். எனவே தான் இந்த இடமாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றார்.

மஹிந்த ராஜயபக்ஷவின் அம்பாந்தோட்ட வழக்கிற்கும் இந்த இடமாற்றத்துக்கும் தொடர்பிருக்கிறதா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஜயதிலக்க, அப்படியான செய்திகளில் உண்மை இல்லை எனக் கூறினார்.

# உலக லெவன் ஒருநாள் அணியில் டெண்டுல்கருக்கு பதில் ராவிட்!



டுபாய் —

உலக லெவன்-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிக்கான ஒருநாள் அணியில் டெண்டுல்கருக்கு பதிலாக ராவிட் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐ.சி.சி. சார்பில் உலக லெவன் - அவுஸ்ரேலிய அணிகளிடையே 3 ஒருநாள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டி நடத்தப்படுகிறது.

சுப்பர் சீரிஸ் எனப்படும் இந்தப் போட்டியின் ஒருநாள் போட்டிகள் அடுத்தமாதம் 5, 7, 9 ஆகிய திகதிகளில் மெல்போர்னில் நடைபெறவுள்ளது. 6 நாள் டெஸ்ட் போட்டி சிட்னியில் 14ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டிக்கான உலகலெவன் அணியில் இடம்பெற்ற இந்திய வீரர் டெண்டுல்கர் விளையாடவில்லை. இதேபோல தென்னாபிரிக்க வீரர் கிப்ஸும் விளையாடவில்லை.

டெண்டுல்கர் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் அணியில் இடம்பெற்றிருந்தார்.




டெஸ்ட் போட்டியில் அவருக்குப் பதிலாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் சேர்க்கப்பட்டுள்ளார். ஒரு நாள் போட்டியில் ராவிட், டெண்டுல்கருக்குப் பதிலாக களமிறங்குகிறார். கிப்ஸுக்குப் பதிலாக மேற்கிந்திய வீரர் கைல் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தப் போட்டிக்கான உலக



லெவன் அணி வீரர்கள் வருமாறு -

டெஸ்ட் அணி -

சிமித் (கப்டன்), ஷேவாக், ராவிட், இன்சமாம், லாரா, கலிஸ், பிளின்ரொப், பொலக், மார்க் பௌச்சர், ஹார்மிசன், சொகைப் அக்தர், முரளிதரன், டானியல் விற்றோரி.

ஒருநாள் அணி -

பொலக் (கப்டன்), கைல், ஷேவாக், கலிஸ், லாரா, கெவின் பீற்றர்சன், ராவிட், பிளின்ரொப், சங்கஹாரா, சயிட் அப்ரிடி, சொகைப் அக்தர், என்ரினி, முரளிதரன், டானியல் விற்றோரி.

விளையாட்டு

# பாடசாலை மட்ட கிரிக்கெட் 18 வயது பிரிவில் சம்பியனானது யாழ். மத்திய கல்லூரி அணி!

யாழ்ப்பாணம் —

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளின் 18 வயதிற்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையே நடைபெற்ற 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட சம்பியனாக யாழ். மத்திய கல்லூரி அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில், யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்கொண்டு ஆடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 14 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி வரையிலான போட்டிகள் 30 ஓவர்கள் கொண்டதாகவும், இறுதிப் போட்டி 40 ஓவர்கள் கொண்டதாகவும் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 30.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் ஹரிஷன் 28, கிரிசாந் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்தவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில் டயான் 3, நவநீத் 3, மயூரன் 2, வியாசன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி ஒரு கட்டத்தில் 5 விக்கெட்டினை இழந்து 30 ஓட்டங்களை மட்டும் பெற்று இக்கட்டான நிலையில் இருந்தபொழுது கிறிஸ்ரி ஜோன்சன், அணித் தலைவர் மகீபன் ஆகியோரது இணைப்பாட்டத்தின் உதவியுடனும், மகீபன், செல்ரன் ஆகியோரது (ஆட்டமிழக்காமல்) இணைப்பாட்டத்தின் மூலமும் இறுதிப் போட்டியில் 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவானது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணித் தலைவர் மகீபன் ஆட்டமிழக்காமல் 32, செல்ரன் ஆட்டமிழக்காமல் 26, கிறிஸ்ரி ஜோன்சன் 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பாக நிரூபன் 2, சஞ்சீவன், நவகீதன், அக்சயன், கிருசாந் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்த இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி அணி, வடபகுதியின் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகியவற்றில் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்ட அணிகளுடன் மோதும் போட்டிகள் இந்த மாத இறுதியில் யாழ்.நகரில் நடைபெற்று கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்படும் அணியுடன், வடக்கு-கிழக்கு மாகாண சம்பியனைத் தெரிவு செய்யும் போட்டி நடைபெறவுள்ளது. (58)

# பெண்கள் வலைப்பந்தாட்டம்; உடுவில் அணி சம்பியனானது!



புத்தூர் —

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உடுவில் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

இறுதியாட்டத்தில் வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுவில் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் இடைவேளைக்கு முன்னர் 21:04 என்ற பேற்றுக் கணக்கிலும், இடைவேளைக்குப் பின்னர் 18:03 என்ற பேற்றுக் கணக்கிலும், உடுவில் விளையாட்டுக் கழகம், பொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

இதில் சிறந்த ஆட்ட நாயகியாக உடுவில் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜீத்தா தெரிவு செய்யப்பட்டார். (12)

# சப்பல் தெரிவித்த கருத்துகளுக்கு விளக்கம் அளிப்பாராம் கங்கூலி!



மும்பை —

சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிய கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நேற்று அதிகாலை விமானம் மூலம் இந்தியா வந்து சேர்ந்தது. ஆனால், பயிற்சியாளர் சப்பல் மற்றும் உடல் நிபுணர் ஜோன் குளோஸ்டர் ஆகியோர் நாடு திரும்பவில்லை. அவர்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று திரும்புகின்றனர்.

மும்பை விமான நிலையத்தில் கங்கூலி நிருபர்களிடம் கூறியதாவது -

பயிற்சியாளர் சப்பல் என்மீது கிரிக்கெட் சபையிடம் புகார் கூறியுள்ளார். இது தொடர்பாக எந்தக் கருத்தையும் வெளியிட விரும்பவில்லை. இந்தப் பிரச்சினையில் இருந்து விலகியிருக்கவே விரும்புகிறேன்.

கிரிக்கெட் சபையிடம் சப்பல்தான் புகார் கூறியுள்ளார். இவ்வாறு சில சமயம் பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். இதற்காக அணியில் உள்ள மற்ற வீரர்கள் கவலைப்படவேண்டாம். இது தொடர்பாக கிரிக்கெட் சபையிடம் விளக்கம் அளிக்கத் தயாராக உள்ளேன்.

இறுதிப் போட்டியில் தொடர்ந்து தோல்வியடைந்து வருகிறோம். இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடிவு எடுத்து வருகிறோம். டெஸ்ட் போட்டியில் நான் உட்பட வீரர்கள்



அனைவரும் சிறப்பாக ஆடினோம்.

பந்துவீச்சில் பதான், சகீர்கான் அபாரமாக பந்து வீசினார்கள். அவர்கள் சுழற்பந்து வீச்சுக்கு இடம்கொடுக்கவில்லை. கைவிற்கு பதிலாக யுவராஜ் சிங்கை களமிறக்கியது எனது தனிப்பட்ட செயல் கிடையாது. சப்பல் மற்றும் துணைக் கப்டன் ராவிட்டுடன் கலந்து ஆலோசித்துதான் இந்த முடிவை எடுத்தோமென அவர் தெரிவித்தார்.

# விளையாட்டு வினையானது; வீரரின் உயிரைப் பறித்தது!

லொஸ்வேகாஸ் —



விளையாட்டு வினையாகி வீரரின் உயிர் பிரிந்த சம்பவம் மற்றுமொன்று நடந்திருக்கிறது. தலையில் விழுந்த அதிரடித் தாக்குதல், குத்துச் சண்டை வீரரின் வாழ்க்கையையே முடித்து விட்டது.

லீவென்டர் ஜோன்சன் (வயது 35) சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு நடத்தும் குத்துச் சண்டைப் போட்டியின் லைட்-வெயிட் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றவர். சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் முயற்சியில், உயிரையே இழந்துவிட்டார்: லொஸ்வேகாஸ் மருத்துவ மனையில், கடந்த வியாழன் இவரது உயிர் பிரிந்தது.

கடந்த வாரம் நடந்த லைட்-வெயிட் சம்பியன் பிரிவுப் பட்டத்துக்கான போட்டியில் ஜோன்சன் - ஜீசஸ் சாவேஷ் ஆகியோர் மோதினர். சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ளும ஆர்வத்தில் கடும் போராட்டம் நடத்தினார் ஜோன்சன். மறுமுனையில், சாவேஷ் பின்னி எடுத்துவிட்டார். 11ஆவது சுற்றில் ஜோன்சன் தலையில் சரமாரியாகக் குத்துவிழுந்தது. அடி தங்காமல், அப்படியே வலையில் சாய்ந்து விழுந்துவிட்டார். சாவேஷ் வெற்றிபெற்றதாக, நடுவர் அறிவித்தார்.

அறைக்குக் கொண்டு செல்லப்பட்ட லீவென்டர் ஜோன்சன், அதற்கப்புறம் எழுந்திருக்கவேயில்லை. நினைவிழந்து, கோமா நிலைக்குச் சென்றுவிட்ட அவரை, அங்கிருந்து மருத்துவமனையின், அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தனர். குத்துச் சண்டையில் கிடைத்த அடி, அவரது தலையின் மூளைப் பகுதியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

மூளையில் ரத்தக் கசிவு இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால், பலன் எதுவுமில்லை. கடந்த வியாழன் இரவு பரிதாபமாக உயிரிழந்தார் ஜோன்சன்.

# புத்தூர் கலைமதி கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி; ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்

புத்தூர் —

கலைமதி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மின்னொளியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதன் முதல் செற்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:20 என்ற புள்ளியடிப்படையிலும், இரண்டாவது செற்றில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையிலும் ஒவ்வொரு செற்றில் வெற்றி பெற்றன. இதனால், அடுத்த செற்கள் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற போது, ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:20, 25:19 என இரு சுற்றுக்களிலும் தொடர்ச்சியாக வெற்றி பெற்றது. இதனால் 3:1 என்ற செற் கணக்கில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

அதனைத் தொடர்ந்து 4 பேர் கொண்ட ஓவர் கேம் போட்டியில் சிவகுமாரன் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை குணசேகரா அணி மோதியது. இதில் சிவகுமாரன் அணி, குணசேகரா அணியை 59:55 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து 6 பேர் கொண்ட ஓவர்கேம் போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவகுமாரன் அணி மோதியது.

இதில் முதலாம், மூன்றாம், ஐந்தாம் சுற்றுக்களை 15:01, 15:06, 15:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றதோடு, இரண்டாம், நான்காம் சுற்றுக்களை 1:15, 2:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சிவகுமாரன் அணியும் வெற்றி பெற்றது.

இதனால் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம், சிவகுமாரன் அணியை 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிகொண்டது. (12)

# இன்றைய கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் மத்திய விளையாட்டுக் கழகத்தால், வி.ரி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று காலை 9.00 மணிக்கு ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்.பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுன்னாகம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சிநேகபூர்வமான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது. (58)

# இறுதி வெற்றி இலக்கை தவறவிட்டால் வரலாற்றை இழந்தவர்களாகி விடுவோம்

## கிராமிய உழைப்பாளர் சங்கம்

யாழ்ப்பாணம்

உரிமைக்காகப் போராடி வரும் எமது மக்கள் - இறுதி வெற்றி இலக்கை எட்டக்கூடிய பலத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று காத்து நிற்கிறது. அதைத் தவறவிடுவோமாயின், வரலாற்றை இழந்தவர்களாகி விடுவோம் என எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு தொடர்பாக யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நெடுங்காலமாகப் போராடி வரும் எமது தமிழ்த் தேசிய இனம், போராட்டத்தின் வெற்றி இலக்கை எட்டக்கூடிய ஒரு வரலாற்றுக் கட்டத்தைச் சந்தித்து நிற்கிறது.

காலம் காலமாகப் பல வடிவங்களாலும், முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழர் உரிமைப் போராட்டங்களைச் சிங்கள இனவாத சக்திகள் அடக்கி ஒடுக்கி வந்த போதெல்லாம் அடக்குமுறைகளை எமது உரிமைக்கான போராட்ட வழிமுறைகளால் தகர்த்தெறியப்பட்ட போது, சிங்களதேசம் ஆட்டம் கண்டது.

இதன் விளைவாக வந்த சமாதானத்தையும் தமிழர் தேசம் வரவேற்றுக் கொண்டது. எனினும் எமது எதிர்பார்ப்புகள், பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் - இழுத்தடிப்புகள் மூலம் எமது போராட் டத்தைச் சிதைக்கின்ற சதி நடவடிக்கைகளை மாறி மாறி வந்த சிங்கள அரசுகள் மேற்கொண்டன.

சர்வதேசத்திற்கு ஒரு முகத்தையும், தமிழர்களுக்கு ஒரு முகத்தையும் காட்டி வந்த சிங்கள ஆட்சியாளர்களின் இரட்டை வேடங்களைச் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்து வருவது எமக்கு மிகவும் சாதகமான ஒன்றே.

இதேவேளையில் வெட்டி வீழ்த்தப்பட்ட ஆட்டுக்கடா உயிர்பிரியும் நேரத்தில், தனது முழுமூச்சையும் ஒன்றுசேர்த்துப் பலமாக வெளிப்பட துடிதுடித்து இறப்பது போல், சிங்கள பேரினவாதம் தெற்கில் தனது முழு மூச்சையும் ஒன்றுசேர்த்து வருகிறது.

இந்தத் தருணத்தில் உரிமைக்காகப் போராடி வரும் எமது தேசத்து மக்கள் - இறுதி வெற்றி இலக்கை எட்டக்கூடிய பலத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பம் ஒன்று காத்துநிற்கிறது. அதைத் தவறவிடுவோமாயின் வரலாற்றை இழந்தவர்களாகிவிடுவோம்.

இந்த வேளையில் வவுனியா தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டுப் பிரகடனத்தை வலியுறுத்த, எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெற இருக்கும் பொங்குதமிழ் நிகழ்வில் அனைவரும் பங்கெடுப்போம்.

எமது எண்ணங்கள் ஒன்று சேரட்டும், தமிழ்த் தேசிய உணர்வு பொங்கட்டும், சர்வதேசமே எமது உணர்வுகளை அங்கீகரி. என ஓங்கி ஒலிக்க குரல் எழுப்புவோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும்

உடுவில்

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவும், ஸ்தாபகர் நினைவு தினமும் எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.செல்வக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஸ்தாபர் நினைவுப் பேருரையை கல்லூரி பழைய மாணவனும், ஓய்வு பெற்ற ஆசிரியரும் வலம்புரி பத்திரிகை பிரதம ஆசிரியருமாகிய கலாபூஷணம் சு.துரைசிங்கம் நிகழ்த்துவார். (101)

## மந்திகை வைத்தியசாலையின் வைத்தியக் கண்காட்சி

வடமராட்சி

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் பரிசாரகர் பயிற்சியை மேற்கொண்டுவரும் மாணவர்களால் வைத்திய கண்காட்சி ஒன்று - கடந்த செவ்வாய்க் கிழமை காலை 9 மணியளவில் வைத்திய சிகிச்சை பிரிவு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

இதனை யாழ். பிராந்திய பிரதி சுகாதார பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் பார்வையிட்டு, தனது திருப்தியை தெரிவித்தார்.

இதில்நீரிழிவு எய்டஸ், விசர் நாய்கடி, பாம்புக்கடி போன்றவற்றுக்கு சிகிசசை அளித்தல மற்றும் கர்ப்பிணிகளுக்கான ஆலோசனைகள் தொடர்பான விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதுடன் பல்வேறு வகையான பாம்புவகைகளும் உயிருடன்போத்தலினுள் அடைக்கப்பட்ட நிலையில பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன.

பல்வேறு நோய்கள் வராமல் தடுக்க வேண்டிய ஆரம்ப சுகாதாரம் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. (17)

## அபிவிருத்தி புனர்வாழ்வு காரியாலயம் உடுவிலில் திறந்து வைக்கப்பட்டது

வலிகாமம்

வலிகாமம் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன காரியாலயம் - நேற்று முன்தினம் உடுவில் லவ் லேனில் முற்பகல் 10 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.


இந்த நிகழ்வு நிறுவனத் தலைவர் சி.சிவமகாராஜா தலைமையில் நடைபெற்றது.

முதல் நிகழ்வாக மங்கள விளக்கை பங்குத்தந்தை எஸ்.சி. ஆணட் மற்றும் கிராம அலுவலர் என். ரவீந்திரன், பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து நிறுவனத்தின் பெயர்ப்பலகையை யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் திரைநீக்கம் செய்துவைக்க, காரியாலயத்தை வைபவரீதியாக பிரதேச செயலகர் சி.திருவாகரன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரையை நிறுவனத்தின் செயலாளர் மு.அம்பிகைபாலன் நிகழ்த்தினார். தலைமையுரை, சிறப்புரைகளை பங்குத்தந்தை, பிரதேச செயலர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர். இடம்பெயர்ந்தோர் நிறுவன சமாசத் தலைவர் எஸ்.கணேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.





# ஈச்சமோட்டை குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்

யாழ்.ஈச்சமோட்டைப் பகுதியில் அமைந்துள்ள மறவர் குளம் சனசமூக நிலையத்தின் முன்பாக உள்ள குளம், முதலைக்குளம் என்பன ஆழமாக்கப்பட்டு, கட்டுகள் கட்டப்பட்டு புனரமைக்கப் பட்டுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து பாற்குளத்துக்கு அருகில் அமைந்துள்ள குன்று குளமும் ஆழமாக்கப்பட்டு, கட்டுகள் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேநேரம் முதலைக் குளம் ஆழமாக்கப்பட்ட வேளை, அகழ்ந்தெடுக்கப்பட்ட மண்ணை வெளி இடங்களுக்குக் கொண்டு செல்ல முற்பட்ட பொழுது, கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையத்தினர் எடுத்த முயற்சியால், ஈச்சமோட்டை கிராமத்தையும், கொய்யாத்தோட்ட கிராமத்தையும் இணைக்கும் குறுக்கு வீதியில் அந்த மண் கொட்டப்பட்டு, குறுக்கு வீதி செப்பனிடப்பட்டு வருகிறது.

ஈச்சமோட்டை கிராம மக்கள் ஆலயங்கள் மற்றும் திருக்குடும்பக் கன்னியர் மடம், வைத்திய சாலை என்பவற்றுக்குச் செல்லும் பாதையாக பயன்படுத்தப்பட்ட இந்த வீதியில் மழை காலத்தில் தண்ணீர் 2 அடிக்கு மேல் நிற்பது வழமை.

இதனால் இந்தப் பாதையால் செல்வோர் மிகவும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (58)

## சுகாதாரத் தொண்டர்களுக்கு அடையாள அட்டைகள்

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான அடையாள அட்டைகள் யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் சங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை வடமராட்சி, தென்மராட்சி, கோப்பாய், யாழ்ப்பாணம், தெல்லிப்பளை பகுதி தொண்டர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

இதேவேளை சண்டிலிப்பாய் சுகாதாரத் தொண்டர்களுக்கான அடையாள அட்டைகள் கோப்பாய் சுகாதாரத் தொண்டர்கள் அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. எனவே அந்தந்தப் பகுதி சுகாதாரத் தொண்டர்களை வந்து தத்தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் சங்கத் தலைவர் ஜெ.ரவிச்சந்திரன் அறிவித்துள்ளார். (12)

## மாநாடு

தென் இந்திய திருச்சபையின் 'இறைமக்கள் மகாநாடு' உடுவில் தென்னிந்திய திருச்சபையில் நடைபெறவுள்ளது

## உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

வலிகாமம்

வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளுக்கிடையில் முகாமைத்துவச் செயற்பாட்டு மதிப்பீட்டை மேற்கொண்டவேளை, பின்வரும் சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் முறையே 1,2,3ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

இணுவில் பொது நூலகமும், இணுவில் தெற்கு சனசமூக நிலையமும் 1 ஆம் இடத்தையும் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேசா சனசமூக நிலையம் 2 ஆம் இடத்தையும் - உடுவில் கிழக்கு இணுவில் அண்ணா சன சமூக நிலையம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலைய முன்பள்ளி 1 ஆம் இடத்தையும் - இணுவில் பொது நூலகமும், இணுவில் தெற்கு சனசமூகநிலையமும் 2 ஆம் இடத்தையும் - உடுவில் கிழக்கு இணுவில் அண்ணா சனசமூக நிலையம் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : வி.டர்ஜினி
முகவரி : நெடுந்தீவு.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------

கூப்பன்களும் புத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்




கொழும்பு விபவி நிறுவன ஓவிய வட்டத்தினருடன் இணைந்து யாழ். திருமறைக்கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ள ஓவியக்கண்காட்சி நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களைப் படங்களில் காணலாம்.




# மாற்றி யோசிக்கிறார்கள்


வெய்ன் ரூணி நடத்தை காக்க காவாக்கால்....

கிரிக்கெட் ஆட்டம் இங்கிலாந்தில் பிறந்தது, வளர்ந்தது, செழித்தது. ஆனால், கால மாற்றங்களால் சிறிது நலிந்துபோக உதைபந்தாட்டம் அந்த முதன்மை இடத்தைப் பிடித்துக்கொண்டது. ஆனால், ஆஷஸ் தொடரைப் பதினெட்டு வருடங்களுக்குப் பின் கைப்பற்றி இங்கிலாந்து மகத்தான வெற்றி பெற்றதும், இங்கிலாந்து விளையாட்டு ரசிகர்களின் சிந்தனை மாற்றம் விநோதமாகவும், வியப்புக்கு உரியதாகவும் இருக்கிறது. உதைபந்தாட்ட வீரர்களுக்கு இருந்த மதிப்பும், மரியாதையும், ரசிகைகள் கூட்டமும் பிளின்ரொப், பீற்றர்சன், ஹர்மிசன் போன்றவர்கள் மீது மாறி வந்தது முதல் படி. இதனைத் தொடர்ந்து இப்போது கருத்துக் கணிப்பொன்று நடைபெற்றுள்ளது. அறுபத்தாறு வீதமானவர்கள் கிரிக்கெட் கவர்ச்சிகரமானது என்று கூற, இருபத்திரண்டு வீதமானவர்கள் உதைபந்தாட்டம் கவர்ச்சியானது என்கிறார்கள். கிரிக்கெட் ஆட்டத்தில் இரு தரப்பாரும் ஆவேசம் கொண்டு ஆடுவார்கள். ஆனால், பரஸ்பரம் ஒருவரையொருவர் கௌரவிப்பார்கள். ஆனால், உதைபந்தாட்டம் அப்படியல்ல. முரட்டுத்தனமும், கலவரங்களும் நிறைந்ததாக அமைந்துவிடும் விளையாட்டு அது என்று பொரிந்து தள்ளுகிறார்கள். ஒரு நபரைக் கருத்துக்கேட்டபோது - ஸ்ரான்லி மத்தியூஸ், கெரி லினேக்கர், டேவிட் பெக்காம் போன்றவர்கள் கௌரவமான மனிதர்கள்தான். ஆனால், பெரும்பாலான உதைபந்தாட்ட வீரர்கள் முரடர்கள் என்று கூறியிருக்கிறார் அவர்.

அண்மையில் நடைபெற்ற ஒரு சில சம்பவங்களும் உதைபந்தாட்டத்தின் மீதான வெறுப்பை அதிகரித்துவிட்டதாகத் தெரிகிறது. இங்கிலாந்தின் புதிய தலைமுறை உதைபந்தாட்ட நட்சத்திரம் வெய்ன் ரூணி, பாலியல் ரீதியாக கௌரவம் அற்ற முறையில் நடந்து இழுக்குத் தேடிவிட்டார். இதே போன்ற சில குற்றச்சாட்டுகள் 2004இல் டேவிட் பெக்கம் மீதும் இருப்பதாக அரசல் புரசலாக கதைகள் வந்ததும் ரசிகர்கள் மனதைப் பாதித்துள்ளது.

ஒரு உதைபந்தாட்டத்துறை சார்ந்த உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில் - கிரிக்கெட் ஆட்டங்களில் பேணப்படும் விளையாட்டுப் பண்புகள், வீரர்களின் நடத்தைகள், விளையாட்டு மைதான சூழ்நிலைகள் ரம்மியமாகத்தான் இருக்கின்றன. இந்த விடயங்களை உதைபந்தாட்டம் பொறுத்து கருத்தில் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறியிருக்கிறார். உலகக் கிண்ணப் போட்டிகள் நெருங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் தரமும் ஆஹா ஓஹோ என்று சொல்லும்படியாக இல்லை. நிலமை இப்படி இருக்க ஆஷஸ் தொடரின் வெற்றி எதிர்பாராமல் இங்கிலாந்தின் உதைபந் தாட்டத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுபோலத் தெரிகிறது. இன்னொரு உத்தியோகத்தர் கருத்துக் கூறுகையில் - உலகக் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்து சோபிக்காவிட் டால், ஆட்டத்தின் செல்வாக்கு அதல பாதாளத்துக்குப் போய்விடும் என்று மிகவும் அச்சப்பட்டுக் கூறியிருக்கிறார்.


டேவிட் பெக்கம் நல்ல பிள்ளைதானா?

இங்கிலாந்தின் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் - என்னதான் இருந்தாலும் உதைபந்தாட்டத்தை முதன்மை நிலையில் இருந்து வீழ்த்த கிரிக்கெட்டால் முடியாது என்பதாகக் கருத்துக் கூறியுள்ளார். என்றாலும், தனது அவதானமொன்றைக் கூறி மகிழ்ந்திருக்கிறார் அவர். இங்கிலாந்து கிரிக்கெட்ரசிகர்கள் அவுஸ்ரேலிய அணிக்கு இருக்கைகளை விட்டு எழுந்து நின்று கரங்களைத் தட்டி ஆறுதலும், SUPPORTம் கொடுத்த காட்சி அற்புதமானது என்று பாராட்டுகிறார் அவர்.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக ஒரு தாய் கூறிய கருத்து உண்மையாக இருக்கிறது. எங்கள் பிள்ளைகள் ரம்மியம் நிறைந்த சூழ்நிலையிலும் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலுமே விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும். அந்த வகையில் கிரிக்கெட் ஆட்டத்தைத்தான் என் பிள்ளைகளுக்கு நான் சிபார்சு செய்வேன் என்று அடித்துக் கூறியிருக்கிறார்.

இரண்டு ஆட்டங்களும் அற்புதமானவை. ஆனால் காலமாற்றங்கள் எப்படி எல்லாம் சிந்திக்க வைக்கின்றன. 2006 உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இங்கிலாந்து கிண்ணம் வென்றால் எல்லாமே மறந்துபோவர். இங்கிலாந்தின் மில்லியன் கணக்கான விளையாட்டு ரசிகர்கள் உதைபந்தாட்ட ரசிகர்களாக மாறிவிடுவார்கள்.

ஜோசப் கிருஷ்ணா.

# புடம் போட்ட தங்கம்

தென்கொரியாவின் இன்சியன் நகரில் ஆசிய தடகளப் போட்டிகள் நடைபெற்று முடிந்துவிட்டன. ஆனால், போட்டிகளுக்குப் போய்வந்த விளையாட்டு வீரர்கள், உத்தியோகத்தர்கள் தொடர்பான கருத்துகள் இன்னும் முடிந்தபாடாக இல்லை.

இதில் ஒரு விசேடம் என்னவென்றால், தமயந்தி தர்ஷா தன் மன ஆதங்கங்களை வெளிப்படுத்திய விடயத்தை ஊடகவியலாளர்கள் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கருத்துகள் வெளியிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் தர்ஷாவிற்கு இலங்கை தடகளம் சார்ந்த வீரர்கள், விமர்சகர்கள், ஊடகவியலாளர்கள் மத்தியில் கனதியான கௌரவம் ஒன்றுண்டு. அநாவசியமான, அபாண்டமான குற்றச்சாட்டுக்களை தர்ஷா எப்போதும் சுமத்துவதில்லை என்கிறார் ஒரு விமர்சகர். இன்னொரு விமர்சகர் தர்ஷாவின் தனிப்பட்ட மற்றும் விளையாட்டுத் துறை ஒழுக்க விழுமியங்கள் மிக உன்னதமானவை. உண்மையில் இலங்கை உருவாக்கிய மேன்மை மிகுந்த முதன்மை நிலை வீராங்கனை என்றால் அவர் தர்ஷாதான் என்று மனந்திறந்து கூறுகிறார்.

1991இல் ஐந்தாவது ஆசியத் தடகளப் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றபோது, இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றவர் தர்ஷா. அதனைத் தொடர்ந்து மூன்று வருடங்களில் நான்கு பதக்கங்கள் பெற்றுக்கொண்டார். 1994இல் ஹிரோஷிமா (ஜப்பான்) ஆசிய தடகளப் போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலம், 1998இல் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் பாங்கொக் (தாய்லாந்து) தங்கப் பதக்கங்கள், பின்னர் புசான் (தென்கொரியா) ஆசியப் போட்டிகளில் 2002இல் 400 மீற்றர் தங்கம் என்று தொடர்ந்தவர் அதைவிட ஆசியமட்ட, தெற்காசிய மட்டத் தடகளப் போட்டிகளில் இவர் வென்ற பதக்கங்கள் அமோகம். தற்போது 2005இல் இன்சியன் (தென்கொரியா) ஆசிய தடகளப் போட்டிகளில் 200 மீற்றர் தங்கம். இப்படியாகத் தன்னை நிரூபித்தவர். இம்முறை தடகள வீரர்கள் எவ்விதம் இலங்கை உத்தியோகத்தர்களின் அசட்டை, திறமையின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டார்கள் என்பதை விலாவாரியாக எடுத்துக் கூறியுள்ளார். இந்த விடயங்களையே ஊடகவியலாளர்கள் தர்ஷாவின் உண்மையான வாசகர்களாக ஏற்று எடுத்துக் காட்டுகிறார்கள்.



தமயந்தி தர்ஷா பொண்ணுக்குத் தங்க மனசு

இதைவிட தர்ஷா எடுத்துக்காட்டாத, ஊடகவியலாளர்கள் கண்டுகொண்ட அவலச் சுவை நிறைந்த விடயங்களையும் பத்திரிகைகள் குறித்துக் காட்டியுள்ளன. இலங்கையின் தேசிய தடகளப் பயிற்றுநர் முன்னதாகத் தான் வழங்கிய பேட்டியொன்றில், இம்முறை இலங்கை ஒரு பதக்கத்தையும் வெல்லாது என்று முரண் கருத்தொன்றைக் கூறியிருந்தாராம். ஆனால், இலங்கை வென்றது இரண்டு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலம், மொத்தம் ஆறு பதக்கங்கள். மொத்த எண்ணிக்கை வரிசையிலும் ஆறாவது இடம்பெற்றது யதார்த்தம். ஐம்பத்தொன்பது பேர் கொண்ட தேசிய வீரர்கள் குழாத்துக்கு பயிற்றுவித்த இவருக்கு அந்தளவிற்கு மதிப்பீடு செய்யத் தெரியவில்லையே என்று கூறுகிறார் இவர்.

இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டுகிறார். அதாவது 4x400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வெள்ளிப்பதக்கம் பெற்ற அணி மற்றும் பல தடகள வீரர்களுக்கு பயிற்சி அளித்தவர் உண்மையில் ஆசியப் போட்டிகளில் தங்கம் வென்ற முன்னாள் இலங்கை வீரர் சுனில் குணவர்த்தன என்றும், ஆனால், அவர் ஒரு உத்தியோகத்தராகத் தென்கொரியாவிற்கு தெரிவு செய்யப்படாத பரிதாபத்துக்கு உள்ளாகினார் என்று கவலைப்படுகிறார் ஒரு ஊடகவியலாளர்.

இதைவிட இன்சியனில் பதக்கங்கள் வென்ற மஞ்சுளகுமார விஜேசேகர மற்றும் மனுர லங்கா இருவரும் முறையே அமெரிக்கா, இத்தாலி நாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் என்று சுட்டிக்காட்டுகிறார். அப்படியானால் உத்தியோகபூர்வமானவர்கள் என்ன செய்தார்கள் என்றொரு கேள்வி எழுகிறது.


இன்னொரு சுவையான விடயமும் சுட்டிக் காட்டப்படுகிறது. உலக சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு ஹெல்சிங்கி சென்ற ஒரு உத்தியோகத்தர், தடகள மைதானங்கள் 400 மீற்றர் அளவில் அமைக்கப்படுவன என்பதைக்கூட அறியாமல், இதென்ன 800 மீற்றர் மைதானம் என்று கேட்டாராம். இப்படியாக இலங்கைத் தடகளப் போட்டிகள் சார்ந்த அவலச்சுவை நிறைந்த விடயங்களைப் பற்றி எடுத்துக்காட்டுகிறார்கள் விமர்சகர்கள். எல்லாம் தடம்புரண்டு கொண்டுதான் போய்க் கொண்டிருக்கிறது போலத் தெரிகிறது.

- நிர்மலன்.

# கூட்டுக்கு வெளியேதான் பாய்ச்சல்

இங்கிலாந்து ஆஷஸ் தொடரை வென்றிருக்கலாம். ஆனால், அத்துடன் சேர்த்து பாரிய சுமையொன்றையும் தன்னையறியாமல் சுமக்கவேண்டி ஏற்பட்டுவிட்டது. அதுதான் பெற்ற வெற்றிகளின்பின்னர் இருக்கும் தகுதியைத் தக்கவைத்துக்கொள்வது. இதனை மிகப் பொருத்தமாகவும், சரியாகவும் உணர்ந்திருக்கிறார் இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோண்.

நாங்கள் உலகின் முதற்தர அணியென்ற பெயரை எடுக்கவேண்டுமானால் ஆஷஸ் தொடரின் பின்னர் இன்னும் பல செயற்பாடுகளை துல்லியமாகச் செய்யவேண்டியுள்ளது. அவரது கண்ணோட்டம் பண்பட்டதாக இருப்பதைப் பின்வரும் கூற்றில் இருந்து உணர்ந்துகொள்ளலாம். இன்றும் அவுஸ்ரேலிய அணிதான் முதன்மையானது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஏனெனில், அவுஸ்ரேலிய அணி தாயகத்திலும், வெளியேயும் இத்தனை ஆண்டுகளாக எத்தனையோ வெற்றிகளைப் பெற்றுள்ளன. அதனை நாங்கள் அந்தளவில் செய்யவில்லை. இங்குதான் வோண் கூர்மையாக எதிர்வரும் மாதங்களை நோக்குகிறார்.


மைக்கல்வோண் உயரத்தெரியும் ஏணிப்படிகள்

இந்தவருட இறுதிப்பகுதியில் பாகிஸ்தான் சென்று மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடவிருக்கும் இங்கிலாந்து, 2006 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இந்தியா செல்லவிருக்கிறது. 2006/2007 ஆம் ஆண்டில் மீண்டும் ஆஷஸ் தொடருக்காக அவுஸ்ரேலியா செல்லவிருக்கிறது இங்கிலாந்து. இவற்றில் இங்கிலாந்து அணி திறமையைக் காட்டினாலொழிய இப்போதைய ஆர்ப்பரிப்பு நியாயப்படுத்தப்படப் போவதில்லை. அதுவும் இந்திய, பாகிஸ் தான் நாடுகளுக்கான விஜயம் பற்றி மிகவும் கவலைப்படுகிறார் வோண். இந்திய மண்ணில் இந்தியாவைத் தோற்கடிப்பது என்பது இலகுவில் நடைபெறக் கூடியதல்ல என்பது அவரது கருத்து.

வெற்றிகள் நிற்பதில்லை. தொடர்ந்து வெற்றிகளை நாங்கள் பெறவேண்டும் என்கிறார் வோண். இந்த விடயம் சார்ந்த கருத்தொன்றைக் கூறும் இங்கிலாந்தின் தெரிவாளர் ஜெவ் மிலர் நல்லதொரு உதாரணத்தை எடுத்துக்காட்டுகிறார். 2003 ஆம் ஆண்டில் உலக றகர் கிண்ணத்தை வென்றது இங்கிலாந்து அணி. ஆனால், தொடர்ந்து அதே தரத்தைப் பேணமுடியவில்லை. இப்படியொரு நிலைக்கு இங்கிலாந்தின் கிரிக்கெட் அணி ஆளாகிவிடக் கூடாது என்று கவலைப்படுகிறார் அவர்.


றிக்கி பொண்டிங் சிறு அசைவு சரிவல்ல

இது ஒருபுறம் இருக்க அவுஸ்ரேலிய பயிற்றுனர் ஜோன் புக்கானன் அணியில் பலதரப்பிலும் மீள்பரிசீலனை கடுமையாக நடைபெறவேண்டியதன் அவசியம் பற்றி எடுத்துக் கூறுகிறார். தனது நிலை சிறிது ஆட்டங் கண்டிருந்தாலும் அது தன் பதவிக்கு ஆபத்தைக் கொண்டுவராதென்று அவர் நம்புகின்றார். பல பக்க அழுத்தம் இருப்பதை ஒப்புக்கொள்ளும் அவர், தான் உட்பட எல்லோருமே மீள்பரிசீலனைக்கு உள்ளாகவேண்டியவர்கள்தான். வெற்றியோ - தோல்வியோ, அதன் பின்னரான அலசல்கள் மிக அவசியமானவை என்கிறார்.

அணித்தலைவர் றிக்கி பொண்டிங் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு ஷேன் வோன் அணித் தலைவராக்கப்படவேண்டும் என்று முன்னாள் அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் டெனிஸ் லிலி கூறியுள்ளார். என்றாலும் றிக்கி பொண்டிங் தன் தலைமைப் பதவி நிலைக்கும் என்று மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஒட்டுமொத்த அணிமாற்றங்களைச் செய்ய முயற்சிப்பது பொருத்தமாக இராதென்பது அவரது கருத்து.

பொதுவாக கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துக்கூறும்போது ஆஷஸ் தொடரை இழந்தது என்பது அவுஸ்ரேலிய அணி எல்லாவற்றையும் இழந்துவிட்டது என்பதல்ல என்றும், அவர்களின் தற்காலிக பின்னடைவு என்பது ஒரு கலைந்து செல்லும் கருமேகம்தான் என்று கூறியுள்ளார்கள். இதனைத்தான் இங்கிலாந்து சார்ந்தவர்களும் கூறுகிறார்கள். அதாவது 2006/2007 ஆம் ஆண்டு ஆஷஸ் தொடரில் இங்கிலாந்தும், அவுஸ்ரேலியாவும் சந்திக்கும்போதுதான் இங்கிலாந்தின் முன்னேற்றப்படிகள் நிரூபிக்கப்படும் என்றும், அவுஸ்ரேலியா பலவீனப்பட்டுத்தான் போய்விட்டதா என்பதும் தெரியவரும். இது ஒரு தொடர்கதை.

- ஜெராட்.

# புதுக்கணிதம் புனிதமானதல்ல



சானியா மிர்ஷா பாவம் இந்திய கிரிக்கெட் அணி

சர்வதேச விளையாட்டுகள் பொறுத்து ஒவ்வொரு துறையினதும் தலைமை ஸ்தாபனங்கள் (ICC, FIFA.....) போட்டிகளில் கலந்துகொள்ளும் சர்வதேச அணிகளையும், அவ்வணி சார்ந்த வீரர்களையும் திறமை அடிப்படையில் தரவரிசைக்குட்படுத்துவது வழமையான ஒரு நிகழ்வு. இந்தத் தரவரிசைப் பட்டியல் எப்போதும் ஒரே மாதிரியாக நிலைத்திருக்கும் என்று முடிவு கட்டிவிட முடியாது. ஒரு சில அணிகள் தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்தி வந்தாலும், சில அணிகளுக்கு ஏற்படும் ஏற்ற இறக்கங்களால், அவ்வப்போது தரவரிசைப் பட்டியலிலும் ஒரு தளம்பல் நிலை காணப்படுவதும் தவிர்க்க முடியாததே.

சிலவிளையாட்டுகளில் பேணப்படும் தரவரிசைக் கணிப்பீடுகள் ரசிகர்களுக்கு புரியும்படியிருந்தாலும், கிரிக்கெட், ரெனிஸ் போன்ற விளையாட்டுகளில் கடைப்பிடிக்கப்படும் தரவரிசைத் திட்டமிடல்களை எல்லா ரசிகர்களாலும் புரிந்துகொள்ள முடியாத ஒரு தன்மை காணப்படுகின்றதென்றால் அது மிகையில்லை.

இந்த வகையில் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலைக் கவனத்திலெடுத்தால், அவுஸ்ரேலிய அணி தனது தன்னிகரில்லாத் திறமையால் முதலிடத்தைத் தக்கவைத்திருப்பதைக் காணலாம். இது ஒரு சர்ச்சைக்குரிய விடயமே அல்ல. ஆனால், அடிமட்டத்திலுள்ள மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் தொடர்ந்தும் இருவகை கிரிக்கெட் ஆட்டங்களிலும் முறையே 8, 9, 10 ஆவது இடங்களில் இருக்கின்றன. அதிலும் ஒருநாள் போட்டிகளுக்கான ICC தரவரிசையைக் கவனத்தில் எடுத்தால், இந்திய அணி 7 ஆவது இடத்திலேயே தொடர்ந்தும் இருப்பது தரவரிசைப் பட்டியலைக் கேள்விக்குரிய ஒன்றாக்குகின்றது.



ரெனிஸ்முறைதான் எங்களுக்குச் சரி

இந்திய அணி 16 இறுதிப் போட்டிகளில் தோற்றுவிட்டு தரவரிசையில் முன்னேற்றத்தைக் காணவில்லையென்று கூறுவது நகைப்புக்கிடமானது என நீங்கள் நினைப்பது எமக்குப் புரிகின்றது. ஆனால் இந்திய அணி 2002 NATWEST தொடரில் கிண்ணம் வென்ற போதும், இலங்கையில் நடைபெற்ற ICC சம்பியன்ஷிப் தொடரிலும், 2003 பங்களாதேஷ் முத்தரப்புத் தொடரிலும், இணைச் சம்பியனாகியபோதும் இந்திய அணி தரவரிசையில் முன்னேற்றம் காணவில்லை. இதில் கவனத்தில் எடுக்கவேண்டிய முக்கிய விடயம் 5ஆவது, 6ஆவது இடத்திலுள்ள அணிகளுக்கும் இந்திய அணிக்குமான புள்ளி வித்தியாசங்கள் அதிகமல்ல என்பதுதான்.

அத்தோடு 2003 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியபோதும், தரவரிசையில் முன்னேறவில்லை. இதுகுறித்து கங்கூலியே ஒருசமயம் தனது அதிருப்தியைப் பகிரங்கமாக வெளியிட்டிருந்தார்.

இந்தவகையில் ரெனிஸ் தரவரிசைப் பட்டியலைக் கவனத்தில் எடுப்போமாயின், அங்கு கையாளப்படும் முறையே தனி. உதாரணமாக மகளிர் ரெனிஸைக் கவனத்தில் எடுத்தால், சுமார் ஒருமாதத்துக்குமுன் இரண்டாம் இடத்தில் இருந்தவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவா. முதலிடத்தில் இருந்தவர் அமெரிக்காவின் லின்ட்ஸே டெவன் போர்ட்.

ஆனால், சென்றமாதம் லொஸ் ஏஞ்சல்ஸ் ரெனிஸ் அரையிறுதியில் ஷரபோவா தோல்வியடைந்தாலும், அவர் நம்பர்வண் இடத்தை முதன்முதலாகப் பிடித்துக்கொண்டார். இந்த உயர்நிலை ஒருவாரமே முதலில் ஷரபோவாவுக்குக் கிடைத்திருந்தது, தொடர்ந்து நடைபெற்ற US ஓபன் தொடரில் அரையிறுதிப் போட்டியில் கிளிஸ்ரஸிடம் தோல்வியடைந்தாலும், இழந்த முதலிடத்தை ஷரபோவா மீண்டும் கைப்பற்றியுள்ளார்.

அவ்வாறே இந்தியாவின் மகளிர் ரெனிஸ் நட்சத்திரம் சானியா மிர்ஷாவும் US ஓபன் தொடருக்கு முன்பு 42 ஆவது இடத்திலிருந்தார். ஆனால், இந்தத் தொடரின் 4 ஆம் சுற்றுக்கு முன்னேறி ஷரபோவாவிடம் அவர் தோல்வியடைந்தார். சானியா தோல்வியைச் சந்தித்தாலும், தற்போது தரவரிசையில் 34 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

அதாவது இங்கு மனதிருத்திக் கொள்ளவேண்டிய விடயம் -இவ்விருவரும் கிண்ணங்களைத் தம் கையகப்படுத்தாமலே தரவரிசையில் முன்னேறியுள்ளனர் என்பது தான்.

எனவே, எவ்வாறு ரெனிஸ் வீர, வீராங்கனைகள் கிண்ணம் வெல்லாவிட்டாலும் தரவரிசையில் முன்னேற்றம் காண்கின்றனரோ, அவ்வாறானதொரு தரவரிசை முறைமை, கிரிக்கெட்டிலும் கடைப்பிடிக்கப்பட்டால் அவை அடிமட்டத்திலுள்ள அணிகளின் வளர்ச்சியை இன்னும் செம்மைப்படுத்துவதாகவே அமையும்.

- விமலன்.

# மாறிப்போகும் வசந்தங்கள்



மொகமட் கைவ் பொறுத்தார் அரசாள்வார்


பத்திரிகைகளின் விளையாட்டுச் செய்திகள் பகுதியில் முக்கியத்துவம் பெறும் செய்தியாக இந்திய அணித்தலைவர் கங்கூலியை, பயிற்றுநர் கிரேக் செப்பல் அணித் தலைமையில் இருந்து விலகிக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டதாகக் கூறப்படும் செய்திகள் பெரும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. இது தொடர்பாக புதியதொரு கோணத்தில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. கங்கூலியை பதவி விலகும்படி கிரேக் செப்பல் தன்முனைப்பாகக் கேட்டுக் கொள்ளவில்லை என்றும், இருவருக்கும் இடையிலான கலந்துரையாடலின் போதே இந்த விடயம் பேசப்பட்டதாகவும் செய்திகள் வருகின்றன. ஆனால், அந்தரங்கமாக இருந்திருக்கவேண்டிய இந்த விடயத்தை கங்கூலிதான் பெரிதுபடுத்திவிட்டதாகவும், பகிரங்கப்படுத்திவிட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. சிம்பாப்வேயுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கு முதல்நாள் வரை இந்த இருவருக்கும் மட்டுமே தெரிந்திருந்த விடயத்தை, கங்கூலி அனாவசியமாக உபதலைவர் ராவிட் மற்றும் நிர்வாக முகாமையாளர் அமிதாப் சௌத்ரி இருவரையும் தொடர்புபடுத்தி பெரிதாக்கிவிட்டார்.

செப்பலைப் பொறுத்தவரை அவரது எண்ணம் மிகச் சிறந்த பதினொரு பேரைத் தெரிந்தெடுப்பதாகவே இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இதனால், கங்கூலி தலைமைப் பதவியில் இருந்து விலகிக் கொண்டு, தனது துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நன்மையானதென்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். ஆச்சரியமடைந்த கங்கூலி இதனை நீங்கள் SERIOUS ஆகத்தான் சொல்கிறீர்களா என்று கேட்டிருக்கிறார். செப்பல் அதற்கு ஆம் என்று கூறியதுடன் டெஸ்ட் போட்டிக்கு இந்திய கிரிக்கெட் அணியின் மத்திய வரிசைக்கு ராவிட், லக்ஸ்மன், யுவராஜ், மொகமட் கைவ் ஆகியோரே மிகப் பொருத்தமானவர்கள் என்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

டெஸ்ட் போட்டிக்கு முதல்நாள் மீண்டும் இருவரும் கலந்துரையாடும் போது, அணியில் மொகமட் கைவ் உள்வாங்கப்படவேண்டுமா அல்லது யுவராஜ் சிங் உள் வாங்கப்படவேண்டுமா என்று கலந்துரையாடியபோது, கங்கூலியின் சிந்தனையில் இருவரில் ஒருவர் என்ற எண்ணம் இருந்திருக்கிறது. ஆனால், செப்பல் இருவரை யும் டெஸ்ட் அணியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறார். அதிலும் 'கங்கூலியைவிட' அணியின் நன்மை கருதி இவ்விருவரும் முதன்மை கொடுக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார். இதன்போது, உண்மையாகத்தான் இக்கருத்தைச் சொல்கிறீர்களா என்று கங்கூலி மீண்டும் கேட்டிருக்கிறார். அதற்குப் பதிலளித்த செப்பல், இந்திய அணியின் உடனடி நன் மைக்கப்பால் நீண்டகால நன்மை கருதி யோசித்துப் பார்த்தால் உண்மையாகத் தான் சொல்கிறேன் என்று பதிலளித்துள்ளார். இந்த நிலையில் கங்கூலி கோபத்துடன் வெளியேறி ராவிட் மற்றும் சௌத்ரியிடம் சென்று தான் தாயகம் திரும்பப்போவதாகக் கூறியிருக்கிறார். செப்பலுக்கு நான் தேவை யில்லை போலத் தெரிகிறது என்றும் பொரிந்து தள்ளி இருக்கிறார். இதன் பின்னர் மீண்டும் எல்லோரும் (நால்வரும்) கூடிக் கதைத்து இடைநடுவில் ஒரு அணித்தலைவர் வெளியேறுவது மிகுந்த பாதிப்புகளை ஏற்படுத் தும் என்று சமாதானம் செய்திருக்கிறார்கள். அதனால், கங்கூலி சமாதானம் அடைந்திருக்கிறார். ஆனால், செய்தியை அம்பலப்படுத்தி விட்டார்.

இப்பொழுது விடயத்தைப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் ஒரு பகைமை நிலையை உருவாக்கியவராகிறார் கங்கூலி. இனிவரு காலங்களில் இவ்விருவரும் ஒன்றிணைந்து செயற்படுவதெ பது எவ்வாறு நடைபெறமுடியும் என்று வினா எழுப்பும் விமர்சகர்கள், இந்திய கிரிக்கெட் சபை தீர்க்கமாக இவரா, அல்ல அவரா என்று முடிவெடுக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டது என்று முடிக்கிறார்கள்.

-மக்டலீன்.



கங்கூலி போதுமடாசாமி

# இவன் வார்த்தை மந்திரம்



சனத் ஜெயசூரிய உத்தம புத்திரன்

இது ஒரு கனவானின் கதை. எத்தனையோ ஏற்ற இறக்கங்கள். விளையாட்டு வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் கூடத்தான். ஆனால், இவரின் கண்ணியமான character இவரை கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் என்றுமே உயர்த்தி வைத்திருக்கிறது. கிரிக்கெட் வாழ்வில் இப்போது இன்னொரு சாதனை புரிந்திருக்கிறார் இவர். பங்களாதேஷ் நாட்டுடனான இரண்டாவது டெஸ்ட் சனத் ஜெயசூரியவின் நூறாவது டெஸ்ட். 100 வருடத்துக்கு மேற்பட்ட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 33 பேர் மட்டுமே நூறு டெஸ்ட் போட்டிகள் என்ற எல்லையைக் கடந்தவர்கள். அந்த முப்பத்து மூன்றாவது வீரர் சனத் ஜெயசூரிய. இலங்கையின் 24 வருட சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் இவரே இலங்கையின் முதல்வர்.

எந்த வேளையிலும் அணியிலிருந்து நீக்கப்படுவாய் என்ற அச்சம் எப்போதும் இருந்தது. எனவே, அதனைத் தக்கவைக்க வேண்டும் என்ற வெறி என்னிடம் இருந்தது. இதன் காரணமாக ஓயாத பயிற்சி. கடுமையான பயிற்சி. சிந்தனையை கிரிக்கெட் ஆட்டத்தைவிட வேறெதுவும் ஆக்கிரமிக்கவிட்டதில்லை. அர்ப்பணிப்புத் தவிர, வேறெதுவும் இல்லை. எனது பதினான்கு வருட கிரிக்கெட் வாழ்க்கை வெற்றிகரமாக அமைந்ததொன்றல்ல. அதற்காக நான் இழந்தவைகள் அநேகம். இப்படியாக இவரது கருத்துகள் வெளிப்பட்டு நிற்கின்றன.

இவர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டபோது, எந்தளவு கௌரவம் அவருக்கு இருந்ததோ, அணித் தலைமையைத் துறக்கும்போதும் அதே கௌரவம் இருந்தது. இது இன்றுவரை நீடிக்கிறது. சனத்தினுடைய சாதனைப் பட்டியல்கள் எல்லோரும் அறிந்ததே. அதேவேளை, சனத்தின் மனிதத்துவமும் சேர்ந்தே வளர்ந்திருந்தது.

இவர் கூறும் கருத்துகள் எல்லாம் காத்திரமானவை. தன்னடக்கம் நிறைந்தவை. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுபவை. அதுவும் குறிப்பாக இளைஞர்களை, சிறுவர்களை நோக்கியே இவரது பார்வை அமையும். இன்றைய நிலையில் ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரராவது இலகுவானதொன்றல்ல. அதேவேளை, வானுயரப் பறந்தும் தன்நிலை மறக்காத சனத்போல ஒரு சர்வதேச கிரிக்கெட் வீரராவது இருக்கிறாரா என்பது நினைத்துப்பார்க்கமுடியாத ஒன்று. இளைஞர்களைப் பார்த்து ஒன்றைக் கூறலாம். சர்வதேச கிரிக்கெட் வீரராகும் உங்கள் ஆசை நியாயமானதே. அதேவேளை, சனத் ஜெயசூரிய போன்ற ஒரு சர்வதேச கிரிக்கெட் கனவானாக வருவதற்கு முயற்சி செய்து பாருங்கள் என்பதுதான் அது.

- லிவிங்ஸ்ரன்

விளையாட்டு அரங்கம்




EXPOAIR

your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



# தமிழருடன், சிங்களவரையும் ஜனாதிபதி ஏமாற்றுகிறார்!

## மகளிர்அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி



நெடுங்கேணி—

தமிழரையும், சிங்களவரையும் சந்திரிகா ஏமாற்றி வருகிறார் என தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

நெடுங்கேணி மக்கள் கட்டுமானப் பயிற்சியின் முதலாவது கட்ட தொடக்கவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் உரைநிகழ்த்துகையில்-

ஒவ்வொரு தமிழ் மகனும் எத்தனையோ அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, நசுக்கப்பட்ட நிலையில்தான் போரிடமுற்பட்டான்.

அதேபோன்றுதான் ஒவ்வொருவரின் மனதும் எழுச்சி கொண்டு, கிராமிய படையாக, எல்லைப் படையாக, துணைப் படையாகப் போரிட்டமையால்தான் பல வருடங்களாக எதிரி பிடித்த நிலத்தை ஓரிரு நாட்களுக்குள் பிடிக்க முடிந்தது.

இதனால்தான் நாம் இன்று இந்த நெடுங்கேணி மண்ணில் உள்ளோம்.

ஆனால், தற்போது இந்த உப்புச் சப்பில்லாத சமாதான சூழலில் எதுவும் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் சந்திரிகா எம்மை ஒரு பயங்கரவாத ஆயுதக்குழு என்று அறிக்கை விடுத்துள்ளார்.

மறுபக்கத்தில் சமாதான பேச்சு வார்த்தைக்கு தயார் என்றும் கூறியுள்ளார்.

இதைப் பார்த்தால் தமிழ் மக்களையும் ஏமாற்றி, சிங்கள மக்களையும் ஏமாற்றுவதோடு, சர்வதேசத்தையும் அவர் ஏமாற்றுகிறார் என்றே கூறவேண்டும்.

இந்த ஏமாற்று நடவடிக்கையை முறியடிக்க வேண்டும்; இதற்கு தலைவரின் கரங்களை மேலும் பலப்படுத்தவேண்டும்.

தலைவரின் கரங்களைத் தொடர்ந்து பலப்படுத்தினால், எம்மீது யுத்தத்தைத் திணிக்கும் எதிரிக்கு எங்களுக்கென்று ஒரு தலைவன் இருக்கிறான், எங்களுக்கு என்று ஒரு படை, கொடி, என்பன உண்டு என்பதை உறுதிப்படுத்துவதோடு, எம் மண்ணில் நாமும் சுதந்திரமாக வாழ்வதோடு, எம்மை வேறு இனத்தவன் ஆளமுடியாது என்பதையும் நிரூபித்துக்காட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உதவி ஆணையாளர் இன்றி இயங்கும் மோட்டார் போக்குவரத்து அலுவலகம்

கிளிநொச்சி செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தில், மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் இன்றி கடந்த ஜூலை மாதம் நடுப்பகுதியிலிருந்து செயற்பட்டு வருகின்றது.

உதவி ஆணையாளர் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதும், வாகனங்களுக்கு உரிமம் வழங்குவதுமான விடயங்கள் இங்கு நடைபெற்று வருகின்றன. ஆனால் வாகனங்களைப் புதிதாக பதிதல், உரிமை மாற்றம் செய்தல், சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல் போன்ற கடமைகளை செய்யமுடியாதநிலையே உள்ளது.

இதுவரையில் பதியப்படாத வாகனங்கள் தொடர்பாக விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்ற போதிலும், நாளாந்தம் 20 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுகின்றன. அத்துடன், இந்த அலுவலகத்திற்கெனதனியான கட்டடம் இதுவரை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னார் -பெரியமடு பிரதேசத்தில் திலீபனின் நினைவாக அடையாள உண்ணாவிரதம்

மன்னார் - பெரியமடு பாடசாலையில் லெப்ரினன்ட் கேணல் தியாகி திலீபனின் நினைவுநாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பெரியமடு பாடசாலையில் காலை 9 மணிக்கு அடையாள உண்ணாவிரதத்துடன் ஆரம்பமாகியது.

பெரியமடு பாடசாலை ஆசிரியர் பெல்மன் அல்மேடா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர்களான அமுதன், இசைச்சுடர் ஆகியோரது தாயாரான இராசதுரை கனகராணி ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியை மன்னார் மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் தென்றல் மாறன் ஏற்றிவைத்தார்.

திலீபனின் திருவுருவப்படத்துக்கான சுடரை பெரியமடு ஈச்சலவக்கையைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றிவைத்து, மலர் மாலை அணிவித்தனர்.

நினைவுரைகளை அதிபர் ஜெராட் அல்மேடா, தென்றல் மறவன், மன்னார் மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பெரியமடு, ஈச்சலவக்கைப் பகுதி மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

திலீபனின் நினைவு நிகழ்வை முன்னிட்டு பெரியமடு ஈச்சலவக்கையிலுள்ள விளையாட்டு மைதானங்கள், வீதிகள், பாடசாலைகள் ஆகியவற்றில் சிரமதானமும் இடம்பெற்றன.

# வவுனியாவில் இராணுவத்தினர் இரவு நேரங்களில் சோதனை

வவுனியா—

வவுனியாவில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இரவுவேளைகளில் இராணுவத்தினர் சோதனையிடுவதால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் கட்டைக்குளம், தேவர்குளம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சில வீடுகளுக்கு அருகில் தங்கியிருந்து, இரவு நேரங்களில் சோதனையில் ஈடுபடும் இராணுவத்தின் இத்தகைய செயற்பாட்டால் பொதுமக்கள் மத்தியில் பயம் தோன்றியுள்ளது.

கடந்தசில நாட்களாக இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் இத்தகைய நடவடிக்கையால் பீதியடைந்த மக்கள்- இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாட்டைக் கண்டித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (03)




வடமராட்சி கிழக்கு - குடத்தனை கரையூர் அ.மி.த.க பாடசாலையில் புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கியூமெடிக்கா நிறுவனத்தின் ஜேர்மன் நாட்டுப் பிரதிநிதிகள் மாணவர்களால் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் அதிபர் த.நவரத்தினம் உரையாற்றுவதை இரண்டாவதுபடத்திலும் காணலாம். (122)

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**செப்ரெம்பர் - 25**

*1818:* முதன்முதலாக லண்டனில் கைஸ் மருத்துவமனையில் நோயாளி ஒருவருக்கு மனித இரத்தம் ஏற்றப்பட்டது. இதற்கு முன் விலங்குகளது இரத்தமே ஏற்றப்பட்டது.

*1900:* ஈ டெஸ் ஈ ஜிப்டி என்னும் ஒருவகை நுளம்பினாலேயே மஞ்சள் காய்ச்சல் பரவுகிறது என்பதைக் கண்டு பிடித்தவர்களில் ஒருவரான அமெரிக்க மருத்துவவியலாளர் வில்லியம் ஜெஸ்ஸி லாஸெர் மரணமானார்.

*1909:* பிரான்ஸ் போர்க்கப்பல் டூலான் துறைமுகத்தில் திடீரென வெடித்துச் சிதறியது. 226 பேர் உயிரிழந்தனர்.

*1917:* அர்ஜைன்டீனா- ஜேர்மனியுடன் இராஜதந்திர உறவைத் துண்டித்துக்கொண்டது.

*1920:* லண்டன் பிரிக்ஸ்டன் சிறையில் 74 நாள்களாக உண்ணாவிரதம் இருந்துவந்த அயர்லாந்து விடுதலை இயக்க வீரர் டி மார்க்ஸ் பினே மரணமடைந்தார்.

*1939:* இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனி விமானங்கள் தொடர்ச்சியாகக் குண்டுமழை பொழியத் தொடங்கின. அதிரடித்தாக்குதல் மூலம் மக்களைப் பீதிக்குள்ளாக்கி சரணடையச்செய்யும் பிளிட்ஸ் கிரிக் என்ற ஜேர்மனியின் இந்தப் போர் உத்தி, அதற்கு ஆரம்பத்தில் பல வெற்றிகளை வழங்கியது.

*1947:* அமெரிக்காவால் ஸ்கை ஹீக் என்ற பிளாஸ்ரிக் பலூன் ஒன்று செலுத்தப்பட்டது. சூரியக் கதிர்கள் பற்றிய ஆய்வுக்காக அனுப்பப்பட்ட இந்தப் பலூன் 32 கிலோ எடையுள்ள கருவிகளைச் சுமந்தபடி சுமார் 100,000 அடிகள் உயரம்வரை பறந்துசென்றது.

*1953:* வியட்நாமில் வீசிய கடுமையான புயலால் 1300 பேரிலும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

*1960:* அணு ஆயுதத் தடையை வற்புறுத்த ராஜாஜி, அமெரிக்கா சென்றார்.

*1972 :* நோர்வேயில் நடந்த பொது வாக்குக் கணிப்பில் அந்த நாட்டு மக்கள், ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேருவதை எதிர்த்து வாக்களித்தனர்.

*1973 :* இந்தவருடம் ஜூலை மாதம் 28 ஆம் திகதி அமெரிக்கா அனுப்பிய ஸ்கைலாப் பூமியை 916 முறை சுற்றிவிட்டுத் திரும்பியது. இதில் சென்ற வீரர்கள் ஏறக் குறைய 14 மணிநேரம் விண்வெளியில் நடந்தனர்.

*1978 :* கலிபோரினியாவில் சாண்டிகோவில் 3000 அடி உயரத்தில் இரு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விழுந்தன. 150 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். 15 இற்கும் மேற்பட்ட வீடுகள் தீப்பற்றி எரிந்தன.

*1981 :* ஐக்கிய நாடுகள் சபையில் 156 ஆவது உறுப்புநாடாக பெலிஸ் இணைந்துகொண்டது.

*1993 :* பிலிப்பைன்ஸில் லஞ்ச ஊழல் குற்றத்துக்காக முன்னாள் அதிபர் மார்க்கோஸின் துணைவியார் இமெல்டா மார்க்கோஸுக்கு 18 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# உலக தரிசன நிறுவனத்தால் கால்நடைகள் வழங்கப்பட்டது

பளை—

பளைப் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை உலக தரிசனம் நிறுவனத்தின் நிதியுதவியுடன், தமிழர் புணர்வாழ்வுக் கழகத்தால் பயனாளிகளுக்கு கால்நடைகள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உதவி திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு கழகத்தின் தலைவர் கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 39 பயனாளிகளில் 29 பயனாளிகளுக்கு- 58 பசுக்களும், மிகுதி10 பயனாளிகளுக்கு 40 ஆடுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் உலக தரிசன நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்-

முன்பள்ளிகளில் இருந்து வெளியேறிய மாணவர்களின் போஷாக்கை மேம்படுத்தி, அவர்களது உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை எமது நிறுவனம் செயற்படுத்தி வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை, கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் ராஜன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (அ)

# வவுனியா வடக்கு பிரதேசத்தில் கிராமியப் படைக்கான ஆயுதப்பயிற்சி

வவுனியா—

வவுனியா வடக்கு பிரதேசத்தில் கிராமியப் படைக்கான ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

நெடுங்கேணி, புளியங்குளம், பாலமோட்டை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள விளையாட்டுமைதானங்களில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆயுதப்பயிற்சியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி பெறுவதற்கு முன்வந்துள்ளார்கள். இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் மிகவும் உணர்வு பூர்வமாக இந்த ஆயுதப்பயிற்சியைப் பெறுவதற்கு முன்வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (03)

நமது ஈழநாடு

வைர வரிகள்

நிர்வாகம் சர்வாதிகாரம் அல்ல.
ஊழியர்களுக்குத் தலைமை தாங்குவதே நிர்வாகம்.
- அகியோ மோரிட்டா -

## நமது நோக்கு

# பொங்கு தமிழோசை போர் முரசொலியல்ல...

நேற்றைய தினம்முதல் எதிர்வரும் வியாழன் வரையிலான ஏழு நாட்களையும் தமிழ் மக்களின் எழுச்சி நாட்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதியன்று மீண்டும் யாழ். குடாநாடு உணர்வெழுச்சிக்கோலம் கொண்டு -

'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு.'

என சர்வதேச சமூகத்துக்கு தமிழ் மக்களின் இதய ஒலியை ஓங்கி ஒலிக்கவைக்க தம்மைத் தயாராக்கிக்கொண்டுவரும் நிலையிலேயே இந்த எழுச்சிவாரம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டின் வீதிகளூடாக பவனி வந்துகொண்டிருக்கும் பொங்கு தமிழ் பானையின் மாதிரி வடிவம் தாங்கிய ஊர்தியும், அந்த ஊர்தியில் இருந்து ஒலிக்கும் எழுச்சிக் கீதங்களும் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற நாவுக்கரசரின் அச்சமற்ற, சுதந்திர வேட்கை மிக்க வரிகளின் ஜீவனை, மக்கள் உள்ளங்களில் உயிர்ப்புற வைக்கும் நிலையில் பேரெழுச்சி கொள்ள வைக்கின்றதென்றே கூறமுடியும்.

காலம் காலமாக சிங்களப் பேரினவாத அரசியல் தலைமைகளால் அரசியல் ரீதியிலும், வாழ்வியல் ரீதியிலும் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டும், பழிவாங்கப்பட்டும், சமூகரீதியில் அவமதிக்கப்பட்டும் வந்துள்ள தமிழ் மக்கள் - கடந்த மூன்றரை ஆண்டுகால போர் நிறுத்தச் சூழலாலும், சமாதானத்தின் பேராலும் ஏமாற்றப்பட்டு ஏமாளிகளாக்கப்பட்டுள்ள நிலையில், இனியும் பொறுத்தால் தகாது எனப் பொங்கி எழத் துணிந்துள்ளமையானது காலத்தின் தவிர்க்கவே முடியாத தேவையின் அடிப்படையிலானதேயாகும்.

இந்தப் பொங்குதமிழ் உணர்வெழுச்சியானது -தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை, அபிலாஷையை மட்டுமல்ல தாங்கள் இதுவரை நடத்திய போராட்டத்தின் நியாயத்தன்மையையும், இனிமேலும் பொங்கியெழுந்து போராட வேண்டியுள்ளமைக்கான காரணிகளையும் உலக சமூகத்திற்கு தெரிவுபடுத்தவும், தமது பிரச்சினை மீதான நியாய உளத்துடனான கரிசனையை அதனிடம் கோரியும் பொங்கி பிரவகிக்கப் போகின்றதென்றே கூறவேண்டும்.

கடந்த மூன்றரை ஆண்டுகால சமாதான நகர்வுகளுக்கு அனுசரணை வழங்கிய நோர்வே அரசும், அதன் பின்னணியில் இருந்து ஆதரவு வழங்கி உற்சாகப்படுத்திய சர்வதேச அமைதியை நேசிக்கும் சமூகமும் இக்காலகட்டப் பகுதிக்குள் அவர்களின் முயற்சிகளுக்கு எத்தகைய பலன் கிடைத்துள்ளது என்பதை மிகவும் நன்கு அறிந்தேயுள்ளன.

இத்தனை ஆண்டுகாலம் ஒஸ்லோ, கொழும்பு, வன்னி, டெல்கி, வொஷிங்டன், லண்டன், டோக்கியோ என அலைந தலைந்து சமாதானத்தை உறுதிசெய்ய, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதீத ஆர்வமுனைப்புடன செயற்பட்ட நோர்வே நடுநிலைப்பணிக்கு சிங்கள பேரினவாதம் எத்தகைய கௌரவத்தையும் ஆதரவையும் வழங்கியது என்பது விபரித்துக் கூற வேண்டிய ஒன்றல்ல...

நோர்வே சமாதான முயற்சிகளில் ஆற்றும் பங்கு குறித்துப் பரிசீலனை செய்யவும் அனுசரணையாளர் பணியிலிருந்து அதனை அகற்றவும் சம்மதித்து பௌத்த சிங்கள இன வெறிக்கட்சிகளின் நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்தல் உடன்பாடு கண்டுள்ள இலங்கையின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் சமாதான முயற்சிகள் மீதான கொள்கை எத்தகையது என்பது தெரிந்த விடயமே.

சமஷ்டி பற்றிப் பேசும் ஜனாதிபதி, ஒற்றையாட்சி குறித்து வலியுறுத்திவரும் பிரதமர், ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என அரசியற்பேச்சு பேசிவரும் எதிர்க்கட்சித் தலைவரும், தமது சொந்த அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள இரு தரப்பினருடனும் அரசியல் பேரம் பேசிவரும் உதிரிக்கட்சிகளும் தேசத்தின் எரியும் பிரச்சினை குறித்து நேர்மையாகவும் தீவிரமாகவும் சிந்தித்து அதற்கு நியாயபூர்வமான தீர்வென்றைக் காணும் தார்மகப் பொறுப்பை உதாசீனம் செய்பவர்களாகவே உள்ளனர்.

பதவியாசையும், அதிகாரமமதையும், மேலாதிக்க மனேபாவமும் கொண்ட சிங்களத் தலைமைகள் சமாதானம், பேச்சுவார்த்தை , தீர்வு என்பது குறித்து படோபமாகப் பேசினலும் இவையெது குறித்தும் எந்தவித முயற்சியையும் கொள்ளும் மனவிருப்பற்றவர்கள் என்பதை கடந்த பல தசாப்தகால அரசியல் வரலாறு தெட்டத்தெளிவாக உணர்த்தியுள்ள நிலையில் இனியும் சிங்களம் - தமிழர் உரிமை குறித்து நியாயமாகச் சிந்திக்கும் என எவரும் நம்புதல் சாத்தியமற்ற ஒன்றேயாகும்.

இந்த நிலையில் சமாதானத்தை வலியுறுத்தி நிற்கும் சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்கள் தமது எதிர்கால நிலைப்பாட்டை தெரிவுபடுத்தி, அதற்கான நியாயத்தை சொல்ல வேண்டிய, ஆதரவை கோரவேண்டிய நிலையிலேயே பொங்கு தமிழ்ச் சங்கு நாதத்தை மீண்டும் ஒலிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.


இது போர் முரசல்ல... பொங்கு தமிழோசை மட்டுமே...!

வவுனியாவில் தமிழத் தேசிய எழுச்சிநாளில் அறிவித்த பிரகடனத்துக்கு வலுவூட்டி உலகின் கவனத்திற்கு மீண்டும் தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கான நியாயக்குரலை, கொண்டுவர யாழ். நகரில் பொங்கி எழவுள்ளனர்.

நியாயத்தின் பக்கம் உலகம் நிற்கும் என்ற நம்பிக்கையில்...

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

# பெருகிவரும் கொலை, கொள்ளைகளை தடுக்கவழியில்லை புலி பிடிக்கிறார்களாம்!

யாழ்ப்பாணம் கொக்குவில் பட்டப்பகலில் வீட்டின் நடுவிலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த ஒரு மூதாட்டி அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவர் அணிந்திருந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. வீட்டின் அலுமாரியிலுள்ள நகைகள், றொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கொலைகளும், கொள்ளைகளும் அதிகரித்துக் கொண்டுதான் வருகின்றன என்று சொல்லிக் கொண்டுவந்தார் நண்பர் பரமசிவம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதிலும் கொலைகளும் கொள்ளைகளும் மலிந்து போயிருக்கின்றன. கொழும்பில் தமிழ் இளைஞர்கள் வெள்ளைவான்களில் கடத்திச் செல்லப்படுவது மீண்டும் அதிகரித்துவருகிறது. இந்த வான்களில் வருபவர்கள் ஆயுதங்களுடன் வருவதுடன் தமிழ் இளைஞர்களைப் பிடித்துக் கைவிலங்கும் போட்டுக் கொண்டு போகிறார்கள்.

கொழும்பில் வந்திறங்கியவுடன் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். இது பற்றி காவல் துறையினர் இதுவரை எந்த விளக்கமும் தெரிவிக்கவில்லை. இந்த நாட்டில் அரசாங்கம் ஒன்று செயற்படுகிறதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவதில் தவறில்லை என்று நான் சொன்னேன்.

கொழும்பில் இரண்டு தினங்களுக்கு முன்னர் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள கொழும்பு நகரின் கொள்ளுப்பிட்டியில் பிரபல நகைக்கடையொன்றில் பெருந்தொகையாக நகைகளும், பணமும் கொள்ளையடிக்கப்பட்டது. நகைக்கடையில் மட்டுமல்ல, பெற்றோல் நிலையத்தில் காசாளராகக் கடமையாற்றிய ஒரு பெண் வங்கியில் வைப்பிலிட கொண்டுசென்ற பணம் கொள்ளையடிக்கப்பட்டது, அவரும் கொலை செய்யப்பட்டார். கொழும்பில் மட்டுமல்ல மற்றும் பல பகுதிகளிலும் கொலையும் கொள்ளைகளும் நாளும் பொழுதும் நடந்துகொண்டுதானிருக்கிறது. வங்கிகளில் பாதுகாப்புப் பணியிலிருப்ப வர்களும் கடமையாற்றுபவர்களும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் பணியாற்றுகின்றனர் என்று பரமசிவம் சொன்னார்.

கிழக்கில் யார் கொலை செய்தாலும் புலிகளே கொலை செய்யப்பட்டாலும்கூட, புலிகள் கொலை செய்கிறார்கள் என்று ஓலமிடும் பேரினவாத அரசியல் வாதிகளும், அவர்களின் ஊடகங்களும் கொழும்பிலும் மற்றும் பகுதிகளிலும் நடக்கும் கொலைகளையும், கொள்ளைகளையும் பற்றி எதுவும் சொல்வதில்லை. ஆனால், விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழுள்ள தமிழர் தாயகப் பகுதியில் கொலைகளும், கொள்ளைகளும் இப்படி நடைபெறுவதில்லையே பார்த்தீரா? என்று கேட்டேன்.

1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணமும் இருந்தபோது கொள்ளையோ, வழிப்பறியோ, கொலைகளோ, சமூகவிரோதச்செயல்களோ நடைபெற்றதில்லை. இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் மற்றும் பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்களும், சமூகவிரோதச் செயல்களும் அதிகரித்துவருவதுகண்டு அங்குள்ள மக்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? மீண்டும் புலிகள் இங்கே வரவேண்டும், புலிகளின் நிர்வாகம் வந்தால் இங்கே அக்கிரமங்கள் ஒழியும். விரைவில் புலிகளின் நிர்வாகம் வரப்போகிறது என்று தெரிந்துதானோ இப்பொழுது கொள்ளைகளும், சமூகவிரோதச் செயல்களும் அதிகரித்திருக்குதோ தெரியவில்லை என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று பரமசிவம் சொன் னார்.

நாட்டில் கொலை, கொள்ளைகளைக் கட்டுப்படுத்தி மக்கள் நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு காவல்துறையோ, பாதுகாப்புப் படையினரோ எதுவும் செய்வதாகக் காணோம். வீதியால் போகிறவர்களில் புலிகள் போகிறார்களா? என்ன கொண்டு போகிறார்கள் என்பதைப் பார்ப்பதில்தான் நேரத்தைச் செலவிடுகிறார்கள். முகமாலை வழியாகச்சென்ற ஒரு பல்கலைக்கழக மாணவன் புலிச் சின்னம் ஏதோ வைத்திருந்ததாக பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவர் பிடித்து வைக்கவும், வாக்குமூலம் பதிவு செய்து கையெழுத்துவாங்கவும் முயன்றிருக்கிறார். மாணவர்கள் பெருமளவில் திரண்டு அந்த மாணவனை விடுவித்துச் சென்றிருக்கிறார்கள் என்று நான் சொன்னேன்.

இப்படிப் பொறுப்பில்லாத ஒரு பட்டாளத்தான் தேவையில்லாமல் சிக்கலை ஏற்படுத்திப் போர் மூளுவதற்குக் காரணமாக இருக்கப் போகிறான். குற்றச் செயல்களைத் தடுக்கமுடியாமல் நாட்டின் அமைதியையும் பாதுகாக்க முடியாமல் காவல்துறையினரோ, பாதுகாப்புப் படையினரோ தமிழீழப் பகுதியில் தொடர்ந்து இருப்பதால் யாருக்கு என்ன பயன்? தமிழீழப் போராட்டத்தை இன்று உலகம் நன்றாக அறிந்துள்ளது. இனியும் சிங்கள - பௌத்த பேரினவாதிகள் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கமுடியாது. ஜனநாயகம், பயங்கரவாதம் என்பதையும் உலகம் நன்கு புரிந்துகொண்டிருக்கிறது. படையினர் தங்களைக் கட்டுப்படுத்தி புத்திசாலித்தனமாகச் செயற்படவேண்டும் இல்லையேல் அவர்கள் தாங்களாகவே வெளியேறுவது நல்லது என்று சொல்லிக்கொண்டு நடந்தார் பரமசிவம்.

## தியாக தீபம் திலீபன் நினைவாக...

ஓவியர் - புகழேந்தி



### தராப்பெயர் தந்தான் நீடே!

போர்வீரன் ஒருவன்
போட்டு ஆயுதங்களை
தார்மீக அகிம்சை
திசையில் - வேர்விட
இருந்துயிர் நீத்தது
இதுவே முதன்முதல்
அருஞ்செய லாற்றிய தீரன்!

உலகத்து மாபுனிதர்
எவரையும் ஈழமும்
இலகுவில் படைத்திட
இயலவிலை - தலம்தாம்
நல்லூரில் தியாகத்தால்
நிலைத்திட வைத்தான்
தொல்புகழ் திலீபனின் நீதி!

இந்தியாவின் கபட
அணுகு முறையதால்
துன்பியலில் ஈழமண்
துடிப்பதை - முந்தியுமே
அறிந்த பார்த்திபன்
அகிலத்தின் பார்வைக்கு
அறிந்த புத்திநகல் நாள்!

தியாகத்தால் திலீபன்
திண்மை உலகத்தில்
நியாயமாய் புனிதஆவளி
நிற்பான் - தயாபரன்
இராசையா் பார்த்திபன்
ஈழத்துக்கு இதன்வழி
தராப்பெயர் தந்தான் நீடே!

- மூலபாரதி -

### ஆகுதியாவோம்



நல்லூரின் வீதியிலே
நீ மூட்டி விட்ட
யாகத்தீ
பதினெட்டு ஆண்டுகள்
கழிந்தும் - பரவி
எரிகின்றது.
பாரிலுள்ளோர் யாவரும்
பணிந்துதலைஏற்றுகின்றார்
எத்தனை கருமேகங்கள்
அந்த சத்தியத்தீயை
அணைப்பதற்காய்
சூழ்ந்தன - அவை
அந்த யாகத்தீயின்
வெம்மையிலே
பரிதிமுன் பனியாயின.
உன் நினைவு நாளில்
உறுதி கொள்கின்றோம்.
விடிவு காண்போம்
இல்லையெனில்
யாகத்தீயில் ஆகுதியாய்
ஆவோம்.

- உருவில் மைனா -

### ஈழத்து தியாகி திலீபன்

எழுச்சியின் திறவு கோலாய் எழுந்த தியாகி
எண்ணத்தின் நாற்றாங்காலாய் எழுந்த தியாகி
விழிப்புறும் தமிழர் தாயகம் காண எழுந்த தியாகி
விடுதலை வேண்டி வேள்வி தொடங்கிய தியாகி
அழியாமல் தமிழர் வரலாற்றை காக்க எழுந்த தியாகி
அன்னைமண் விடிவு பெற உழைத்த தியாகி
வழிகாட்டி தமிழர் வாழ உயிர்தந்த தியாகி
வரலாறு என்றும் வணங்கும் ஈழத்து தியாகி

- மதுரகவி.

## நெடுந்தீவு மீனவரின் தேவையை நிறைவேற்றும் படகுகள் புனரமைக்கும் தளம்...!

கண்ணன்



நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள கடற்தொழிலாளர்களது கண்ணாடி இழைப் படகுகள் கடந்த வருடம் ஏற்பட்ட சுனாமி அனர்த் தம் காரணமாகச் சேதமடைந்து, தொழில் நடவடிக்கைகளைத் தொடர முடியாத நிலையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்த வேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவினர் தம்மாலான பெரு முயற்சியெடுத்து, படகு புனர மைக்கும் தளமொன்றை அமைத் துள்ளனர்.

நோராட் நிறுவனத்தின் உதவியுடன், சுனாமியால் சேதமடைந்த கண்ணாடி இழைப்படகுகள் திருத்தகம் ஒன்று கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு,. தொடர்ந்து படகு புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகிறது.

நெடுந்தீவுப் பகுதியிலுள்ள கண்ணாடி இழைப்படகு திருத்த வேலைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற சுமார் பத்துப் பேரைத் தெரிந்தெடுத்து, அவர்களூடாகவே இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சுமார் 175 இற்கும் மேற்பட்ட படகு கள் இவ்வாறு திருத்தம் செய்ய வேண்டிய நிலையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் இதுவரை சுமார் 80 படகுகள் உரிய முறையில் திருத்தம் செய்யப்பட்டு, பாவனைக்கென பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகு திருத்தம் செய்யும் தளத்துக்கான நடைமுறைகள் எல்லாம் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறப்பட்டு, சேதமடைந்து திருத்தம் செய்யப்படவேண்டிய படகுகள் தொடர்பாகவும், திருத்தங்கள் தொடர்பாகவும் விபரங்கள் திரட்டப்பட்டு- அதன் முறைப்படியே வேலைகள் சீரான முறையிலும், நேர்ந்தியான முறையிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திருத்தம் செய்யப்பட வேண்டிய படகுகளின் உரிமையாளர்களது பெயர்கள் பெறப்பட்டு, அவற்றை குலுக்கல் முறையில் தெரிவு செய்து அதனடிப் படையிலேயே ஒழுங்கு முறையாக வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

திருத்தம் செய்யப்பட்டு வருகின்ற படகுகளில் பெரும்பாலானவை அடித்தளங்கள் சேதமடைந்திருப்பதால், அவற்றை புதிதாக பெரும் செலவு செய்தே திருத்தங்களை மேற்கொள்ளவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக திருத்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் படகு திருத்தும் தள மூடாக திருத்தம் செய்யப்பட்டு வரும் படகுகளுக்கு சராசரியாக ஒரு படகுக்கு சுமார் பதினைந்தாயிரம் ரூபா மட்டுமே செலவு ஏற்படுவதால் காரணமாக பயனாளிகள் பெரும் நன்மையுமடைகிறார்கள்.

நெடுந்தீவில் அமைக்கப்பட்டுள்ள இந்தப்



படகு திருத்தகம் மூலம் சுனாமி காரணமாக சேதமடைந்த படகுகளின் வறிய தொழிலாளர்கள் பெரும் நன்மையடைந் துள்ளதுடன், தொடர்ந்தும் தமது தொழிலைச் சீரான முறையில் மேற்கொண்டு தமது அன்றாட வாழ்க்கைச் சக்கரத்தை உருட்டிச் செல்லக் கூடியுள்ள நிலை உருவாகியுள்ளது.

இந்தவகையிலே இப்படகு திருத்தும் தளத்தை நெடுந்தீவில் அமைத்து, அதனூடாகத் தாம் பெரும் நன்மையடைய வழி சமைத்த கடற்புலிகளுக்கும், வேலைத்திட்டத்தை முன்னெடுத்துவரும் நோராட் நிறுவனம் மற்றும் தளப் பணியாளர்களுக்கும் இதன் மூலம் நன்மை பெற்றவர்களும் தொடர்ந்து பயன் பெற விருக்கும் கடற்தொழிலாளர்களும் தங்களது மனப்பூர்வ மான நன்றிதெரிவிப்பதாகவும், இது தொடர்பாக வினாவியபோது தெரிவித்தமையும் குறிப் பிட வேண்டிய ஒன்றாகும்.

## பொங்கு தமிழ்




பொங்கி எழுந்திடடா தமிழா
பொங்கி எழுந்திடடா!
பொங்கி எழுந்திடடா தமிழா நீ
பொங்கி எழுந்திடடா

பொங்கு தமிழினைக் கண்டு களித்திட
போருக்குப் போகும் சிந்தை வளர்ந்திட
கல்வி வளம் பெற நாடும் நல்முற
கண்டவர் பேச்சை நம்பா திருக்க
பொங்கி எழுந்திடடா! தமிழா நீ
பொங்கி எழுந்திடடா!

பிள்ளை வடிவில்தானே, அந்த முருகன் குறும்பு செய்தான்
வேலுப்பிள்ளையின் மடியில்தானே,
எங்கள் பிரபாவும் குறும்பு செய்தான்
தொட்டால் சுடும் நெருப்பு - அது
தெரிவ தெப்படி நமக்கு! - கை
விட்டால் தானே புரியும்
சுடும் வேதனையின் கணக்கு!

பொங்கு தமிழினைக் கண்டு களித்திட
போருக்குப் போகும் சிந்தை வளர்ந்திட
பொங்கி எழுந்திடடா! தமிழா நீ
பொங்கி எழுந்திடடா!

வீரத் தமிழன் ஆகனும்! - நீ
வெற்றி வாகை சூடனும்! - தன்
மானம் எழுந்து வரும் பொழுது
புலிகளுடன் வந்து சேரனும்!

மானமுள்ள மனிதா! - நீ
வீரமுள்ள மறவா!
சொந்த மண்ணை மீட்கப் போடா!
விடிவெள்ளியாக வாடா!

பொங்கு தமிழினைக் கண்டு களித்திட
போருக்குப் போகும் சிந்தை வளர்ந்திட
பொங்கி எழுந்திடடா! தமிழா நீ
பொங்கி எழுந்திடடா!

நெல்லை. லதாங்கி

## தமிழே பொங்கு



சூரிய தேவனின் தமிழே பொங்கு
சுதந்திர பூமியின் தமிழே பொங்கு
வீரத்தில் விளையும் தமிழே பொங்கு
வேங்கை கொடியின் தமிழே பொங்கு

அவையைப் பிளக்கும் தமிழே பொங்கு
ஆயுதம் சுமக்கும் தமிழே பொங்கு
துணிவை வளர்க்கும் தமிழே பொங்கு
தோழமை வாழ்த்தும் தமிழே பொங்கு

தமிழ் மக்களின் தமிழே பொங்கு
தமிழீழம் பூக்கும் தமிழே பொங்கு
அமிழ்த நதியின் அழகே பொங்கு
அறிவியல் மலையின் நிலவே பொங்கு

பொறியில் பறக்கும் தமிழே பொங்கு
புரட்சியில் சிவக்கும் தமிழே பொங்கு
நெறியில் நிமிரும் தமிழே பொங்கு
நெஞ்சில் குதிக்கும் தமிழே பொங்கு


ஒழுக்கம் நிறைந்த தமிழே பொங்கு
ஓர்மம் வரைந்த தமிழே பொங்கு
உழைப்பு வியர்க்கும் தமிழே பொங்கு
உரிமையில் உயிர்க்கும் தமிழே பொங்கு

வானமும், கடலும் எமக்காகப் பொங்கு
வாழும் நிலம் எமக்காகப் பொங்கு
கானமும், கல்வியும் எமக்காகப் பொங்கு
கணினியும், கலப்பையும் எமக்காகப் பொங்கு

- நல்லை அமிழ்தன்

### இந்தியா, அமெரிக்கா உட்பட 11 நாடுகளை

# அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு அனான் கோரிக்கை



நியூயோர்க் —

இந்தியா - பாகிஸ்தான் உட்பட 11 நாடுகளை அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் கேட்டுக்கொண்டார்.

அணு ஆயுதங்கள் உலக அமைதிக்கு ஆபத்தாக உள்ளன. அதனால், அணு ஆயுத தொழில்நுட்பம் பரவுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் அணு ஆயுத சோதனைக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இதில் மொத்தம் 176 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. 125 நாடுகள் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவு அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனினும் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா, வட கொரியா, எகிப்து, இந்தோனேஷியா, ஈரான், இஸ்ரேல், வியட்னாம், கொலம்பியா ஆகிய பதினொரு நாடுகள் இன்னும் கையெழுத்திடவில்லை.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி இந்த நாடுகளை ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் இந்த 11 நாடுகளும் கையெழுத்திடவேண்டும். கையெழுத்திடாமல் தாமதமாகிக் கொண்டே போனால், ஆபத்தும் அதிகரித்துக்கொண்டே போகும்.

இந்த உடன்பாடு 9 ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டு கையெழுத்துக்கு வந்தபோதும், அது இன்னும் செயல் உருவம் பெறவில்லை என்பது கவலை அளிக்கிறது.

இந்த நாடுகள் இன்னும் கையெழுத்திடாதது, எந்த நோக்கத்துக்காக இது கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கத்துக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்தார்.




# தாய்லாந்தில் குண்டுவெடிப்பு இரண்டு பொலிஸார் உயிரிழப்பு!

பாங்காங் —

தாய்லாந்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் சிக்கி 2 பொலிஸார் உயிரிழந்தனர்.

தாய்லாந்து நாட்டில் தென்பகுதியில் பெருமளவில் முஸ்லிம்கள் உள்ளனர். இந்தப் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இதையொட்டி அந்தப் பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இருந்தபோதிலும் நேற்றுமுன்தினம் காலை வீதியோரமாக இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் இரண்டு பொலிஸார் உயிரிழந்தனர்.

செல்போன் மூலம் இந்தக் குண்டு வெடிக்கவைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாய்லாந்தின் தென்பகுதியில் தீவிரவாதத்தால் கிட்டத்தட்ட 900 பேர் உயிரிழந்துள்ளனர். தற்போது நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும் அல் - கொய்டா தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹரிபொட்டர் புத்தகம் விற்பனையில் சாதனை!

நியூயோர்க் —

பெண் எழுத்தாளர் ஜே.கே.ரவ்லிங் எழுதி அண்மையில் வெளியான ஹரிபொட்டர் புத்தகம் 63 லட்சத்து 97 ஆயிரம் பிரதிகள் விற்று சாதனை படைத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 16 ஆம் திகதி விற்பனைக்கு வந்த இந்தப் புத்தகம் ஓகஸ்ட் முதலாம் திகதிக்குள் இவ்வளவு பிரதிகள் விற்று, அமெரிக்காவிலேயே அதிகம் விற்பனையான புத்தகம் என்ற பெயரைத் தட்டிச் சென்றது. டான் பிரவுனின் - டாவின்சி கோட் புத்தகம் 22 லட்சத்து 61 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் அமைப்பின் ஆயுத வாகனத்தில் குண்டுவெடித்து 19 பேர் உயிரிழப்பு!




காசா —

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே நீண்ட நாட்களாக இருந்துவந்த சோதனையை முடிவுக்குக் கொண்டு வர சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் ஒரு பகுதியாக 1967 ஆம் ஆண்டு முதல் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டில் வைத்தி ருந்த காசா பகுதியை மீண்டும் பலஸ்தீனத்திடம் ஒப்படைத்தது. இஸ்ரேல் படைகள் அங்கிருந்து வெளியேறியதுடன் யூதக் குடியிருப்புக்களும் அகற்றப்பட்டன.

இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் பலஸ்தீன ஹமாஸ் கிளர்ச்சிவாதிகள் தினந்தோறும் பேரணிகள் நடத்தி வருகின்றனர். நேற்றுமுன்தினம் மாலை நடந்த பேரணியில் ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் கலந்துகொண்டனர். ஹமாஸ் கிளர்ச்சிவாதிகளும் ஒரு லொறியில் ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கிகள் வெடி குண்டுகளை ஏற்றிக்கொண்டு பேரணியில் வந்தனர்.

அப்போது அந்த லொறியில் திடீர் என்று குண்டுவெடித்தது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 18 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். 60க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்த வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இஸ்ரேல்தான் காரணம் என்று பலஸ்தீனர்கள் தெரிவித்தனர். ஆனால், இஸ்ரேல் இதனை மறுத்துள்ளது. கிளர்ச்சிவாதிகள் சென்ற லொறியில்தான் குண்டு தவறுதலாக வெடித்துள்ளது என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

# அன்பே ஆருயிரே படமும் சிக்கலில்; எஸ்.ஜே.சூர்யா மீது மீண்டும் வழக்கு!

புதுடெல்கி —

பிரபல இயக்குநரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யா நடித்த நியூ படம் கடும் விமர்சனத்துக்குள்ளானது. இந்தப் படத்தில் ஆபாச காட்சிகள் இடம் பெற்றிருப்பதாகவும் ஆபாசமான இரட்டை அர்த்த வசனங்கள் இருப்பதாகவும்கூறி பெண்கள் அமைப்புகள் போராட்டம் நடத்தின.

இந்தப் படத்துக்குத் தடை விதிக்கக்கோரி சென்னை பெண் சட்டத்தரணி அருள்மொழி வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்று நியூ படத்துக்கு தடை விதித்தது. இதற்குக் கொடுக்கப்பட்ட திரைப் படத் தணிக்கைச் சான்றிதழை ரத்துச் செய்யவும் உத்தரவிட்டது.

நியூ படத்துக்கு விதிக்கப்பட்ட தடையை ரத்து செய்யக்கோரி எஸ்.ஜே.சூர்யா டெல்கி மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார். இதையடுத்து சென்னை உயர் நீதிமன்றம் நியூ படத்துக்கு விதித்த தடைக்கு மேல் நீதிமன்று இடைக்காலத் தடை விதித்துள்ளது.

இந்தப் பரபரப்புகளுக்கிடையே எஸ்.ஜே.சூர்யா இயக்கி நடித்து தயாரித்துள்ள அன்பே ஆருயிரே படம் வெளிவந்துள்ளது. இதிலும் ஆபாசம் இருப்பதாக குற்றச்சாட்டு உள்ளது. இந்தப் படமும் இப்போது பிரச்சினையில் சிக்கியுள்ளது.



இந்தப் படத்தில் எஸ்.ஜே.சூர்யாவுடன் மோதும் வில்லன் "என் பலத்துக்கு நான்கு கைகள் இருக்கின்றன" என்று சவால் விடும்போது ஒரு சட்டத்தரணி குறுக்கிட சூர்யா அவரைப் பார்த்து எடுபிடி என்று அர்த்தம் வரும் வகையில் "நீ அள்ளக்கை" என்று வசனம் பேசுகிறார்.

இந்த காட்சியை எதிர்த்தும் எஸ்.ஜே.சூர்யா மீது புதிய வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அன்பேஆருயிரே படத்தில் சட்டத்தரணிகளை அவமானப்படுத்துவதான காட்சிகள் உள்ளன என்று கூறி நேற்று முன்தினம் சட்டத்தரணிகள் திருச்சி நீதிமன்றில் ஒரு மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது -

அன்பே ஆருயிரே படத்தில் கதாநாயகனாக நடித்துள்ள எஸ்.ஜே.சூர்யா அந்த படத்தில் சட்டத்தரணி வேடம் அணிந்துள்ளவரைப்பார்த்து "சட்டத்தரணிகள் எல்லாம் அள்ளக்கை" என்றும், தகாத வார்த்தைகளால் சட்டத்தரணிகள் சமுதாயத்தைத் திட்டியுமுள்ளார்.

மற்றும் சட்டத்தரணிகள் சமுதாயத்தையே அவமானப்படுத்த வேண்டும் என்ற ரீதியில் அந்தப் படம் அமைந்துள்ளது.

எனவே, அந்தப் படத்தில் மேலே கூறப்பட்டுள்ள காட்சிகள் மற்றும் வசனத்தை வெட்ட வேண்டும். அதுவரை தமிழ் நாட்டில் அந்தப் படம் திரையிடப்படக்கூடாது என்று உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை நீதிபதி அருள் மொழிசெல்வி விசாரணைக்கு ஏற்று, நடிகர் எஸ்.ஜே.சூர்யா, அன்பே ஆருயிரே திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் திருச்சியில் உள்ள சினிமா தியேட்டர் உரிமையாளர் ஆகிய 3 பேரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார்.

# அமெரிக்காவை தாக்கவிருந்த ரீட்டாவின் வேகம் தணிந்தது!



தீப் பற்றிய பஸ்

வொஷிங்ரன் —

அமெரிக்காவை அச்சுறுத்தி வந்த ரீட்டா புயல் திசை மாறி வலுவிழந்துள்ளதாகவும் எனினும், இதனால் ஆபத்து முற்றிலுமாக அகன்றுவிடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரீட்டா புயல்காற்று, திசை மாறியதைத் தொடர்ந்து கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. கடந்தமாதம் கத்ரீனா தாக்கிய நியூஓர்லியன்ஸ் நகரைஅண்மித்த பகுதியில் பலத்த காற்றுடன் கடும் மழை பெய்தது. மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது.

நியூ ஓர்லியன்ஸ் கடலோர பகுதியில் 30 அடி உயரத்திற்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருந்தது. இந்த தடுப்புச் சுவரைத் தாண்டிவந்த ராட்சத அலைகள் நியூ ஓர்லியன்ஸ் நகரைத் தாக்கின.

ரீட்டா புயல் தாக்கலாம் என்ற அச்சத்தால் டெக்சாஸ் மாநிலத்திலிருந்து 13 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர். இந்த மக்களை வெளியேற்றுவதற்கு 500 இற்கும் மேற்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இவ்வாறு மக்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று திடீரென தீப்பிடித்து எரிந்ததில் அதில் சென்ற 20 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

ஹிஸ்டன் நகரின் புறநகர் பகுதியான தல்லாஸ் என்ற இடத்திலேயே இந்த பஸ் தீப்பிடித்து எரிந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ககோலா நகரிலுள்ள பீச் பார்க் - ரீட்டாவின் தாக்குதலில் முற்றாக அழிந்த நிலை.







ரீட்டா சூறாவளி தாக்கும் என்ற அச்ச உணர்வு அமெரிக்காவை ஆட்டி எடுத்து வருகிறது. ஹூஸ்டன் நகர் மக்கள் மாற்று இடம் செல்ல விமான நிலையத்தில் காத்து நிற்கின்றனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

*The Leading Daily of Tamils' Homeland*

# இராணுவத்தை கலைக்கும் எண்ணம் எதுவும் இல்லை!

## அனுராதபுரத்தில் ரணில்

கொழும்பு—

விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்புக்களின்போது இராணுவத்தைக் கலைத்துவிடும் எண்ணமேதும் தமக்குக் கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்திருப்பதாவது -

நாட்டைப் பாதுகாக்கவும், சமாதானத்துக்காகவும் இராணுவத்தினரின் சேவை அவசியமானது. ஜே.வி.பியின் தலைவர் மோசவன்ச அமரசிங்க கொழும்பு நகரசபை மைதானத்தில் வைத்து நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க முடியாமல் விட்டால் இராணுவத்தை கலைத்துவிடுமாறு கோரியிருந்தார். ஆனால், ஐ.தே.க ஒருபோதும் அப்படிச் செய்யாது.

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேக்கு மேல் மாகாண சபையில் ஆளுநர் பதவி வழங்கப்பட இருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க அங்கு மேலும் தெரிவித்தார்.

## 8 மீனவர்கள் கைது!

திருகோணமலை—

திருகோணமலை - குச்சவெளி கடற்பகுதியில் டைனமற் பாவித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த எட்டு மீனவர்கள் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் கைதுசெய்யப்பட்டனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் இன்று வெலி ஓயா விஜயம்!

கொழும்பு—

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக வெலி ஓயா பகுதிக்குச் செல்லவுள்ளார்.

தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்ட பின்னர் வெலி ஓயா என்ற பெயரில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்ட பகுதிகளில் வாக்கு வேட்டையாடும் நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்க இன்று விஜயம் செய்யவுள்ளார்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்திலேயே இந்த சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தேர்தல்...

சென்றாலும் எனக்கு ஓய்வூதியம் வழங்கமாட்டார்கள் என்றே நான் நினைக்கிறேன் எனத் தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டு தனக்கு ஓய்வூதியம் வழங்குமாறு உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையாளர் தாக்கல் செய்திருந்த மனுவை நீதிமன்றம் நிராகரித்ததுடன் தொடர்ந்தும் அவரை பணியில் தொடருமாறும் உத்தரவிட்டது.

தேர்தல் ஆணைக்குழுவொன்றை மேலதிக அதிகாரங்களுடன் அமைப்பது தொடர்பாக 2001 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் மாற்றமொன்று கொண்டுவரப்பட்டது.

இந்தத் புதிய தேர்தல் ஆணையாளர் நியமனத்தை நியமிக்கும்வரை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவை பதவியில் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனினும் இந்த அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட்டு நான்கு வருடங்கள் கடந்த நிலையில் தயானந்த திஸநாயக்கவின் ஓய்வூதிய வயதும் 3 வருடத்தால் கடந்துள்ளதாகவும் தெரிவிக்படுகிறது.

## சுகவீனத்தால் போராளி சாவு!

கிளிநொச்சி—

சுகவீனம் காரணமாக நேற்று போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். லெப்ரினன்ட் கேணல் பிறையாளன் அல்லது சூட்டா என்றழைக்கப்படும் திருகோணமலை - சாம்பல்தீவு - 8 ஆம் வட்டாரத்தைச் சொந்த முகவரியாகவும் புதுக்குடியிருப்பு - கைவேலி 1 ஆம் வட்டாரத்தை தற்காலிக முகவரியாகவும் கொண்ட யசின் சில்வஸ்ரர் என்பவரே சாவடைந்தவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## யாழ்.மாவட்டத் தேர்தல் முடிவை

# ரத்துச் செய்யுமாறுகோரும் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி

கொழும்பு—

கடந்த வருடம் 2 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலை செல்லுபடியற்றதாக பிரகடனப்படுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்சேப மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

இந்த வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பீ.விஜேரத்ன இந்த மனுவைத் தள்ளுபடி செய்தார்.

யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் ஈ.பி.டி.பி வேட்பாளராகப் போட்டியிட்ட வே.குகேந்திரன் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவில் பிரதிவாதிகளாக இங்கு போட்டியிட்ட 119 வேட்பாளர்கள், தெரிவத்தாட்சி அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மற்றும் தேர்தல் ஆணையாளர் ஆகியோர் உட்பட 122 பேர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இது குறித்து 11 பக்கங்களில் வெளியிடப்பட்ட தீர்ப்பில் 1981ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 92(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேர்தலை செல்லுபடியற்றதாகவும், தெரிவுசெய்யப்பட்டவர்கள் தகுதியற்றவர்களாகவும் பிரகடனப்படுத்துமாறு மனுதாரர் கோரியிருந்தார்.

2004 ஏப்ரல் 27ஆம் திகதி இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்ட போதிலும் 19 மே 2004 அன்றே பிரதிவாதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

12 பிரதிவாதிகளின் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி தனது பூர்வாங்க ஆட்சேபனையை தாக்கல் செய்திருந்தார்.

இந்த ஆட்சேபனையில் மனுதாரர் கையொப்பமிட்டிருக்கவில்லை என்றும், மனுத்தாக்கல் செய்து 10 நாட்களுக்குள் அறிவித்தல் விடுக்கப்படவில்லை என்றும் ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன.

முன்னர் நடைபெற்ற பல வழக்குகளையும் கவனத்தில் கொண்டு பிரதிவாதிகளின் ஆட்சேபனையின்படி மனுதாரர் சரியான முறையில் மனுவை சமர்ப்பிக்கத் தவறியுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

பூர்வாங்க ஆட்சேபனைகளைக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 92(1)(ஆ) உறுப்புரையின் பிரகாரம் இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. அத்துடன், தண்டப்பணமாக 60ஆயிரம் ரூபாவை - முதலாம் பிரதிவாதி தொடக்கம் 12ஆவது பிரதிவாதிவரை வழங்கவேண்டும்.

மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான கலாநிதி ஜயதிஸ்ஸ டி கொஸ்தா, டி.எப்பிட்டாவல ஆகியோர் ஆஜராகினர்.

1 தொடக்கம் 12 வரையான பிரதிவாதிகளுக்கு சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் ஆலோசனையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகஈஸ்வரன் சட்டத்தரணிகளான எம்.சுமந்திரன், எஸ்.ஜெயக்குமார் ஆகியோர் ஆஜராகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கரைக்குத்..

சென்றுவிட்டு மீண்டும் கரை திரும்பியபோது கரையில் இருந்த இராணுவத்தினர் மீனவர்களை சிங்கள மொழியில் தகாத வார்த்தைகளால் பேசி கைகளால் தாக்கியதுடன், கற்களைவீசி மீண்டும் கடலுக்குச் செல்லுமாறு மிரட்டினர். இதன் காரணமாக மீனவர்கள் காலை 7 மணிவரை கரை திரும்பமுடியாமல் கடலில் தத்தளித்தபடி இருந்தனர்.

இதேவேளை - மீன்களை கொள்வனவு செய்வதற்கு காத்திருந்த கூலர் வ..கனங்களையும் படையினர் திருப்பி அனுப்பினர். இந்த விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் சூரியகுமார் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்தச் சம்பவத்தை கடற்தொழிலாளர் சங்க சம்மேளனம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். (14)

## சிப்பாய் தற்கொலை!

மன்னார்—

மன்னார் நகரப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுதற்கொலை செய்துகொண்டார்.

நேற்றுக்காலை 7.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

## திடீரென...

நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றது. கடல்நீர் பச்சை நிறமாகக் காணப்பட்டதுடன் மிகவும் பிரகாசமாக ஒளிவீசியது. கடல் நீரினுள் கற்களை வீசியபோது நீர் தெறித்து சிறியளவில் நெருப்புப் பொறிகள் பறந்ததாகவும் நேரில் கண்டவர் கள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக அறிந்த நூற்றுக்கணக்கான மக்கள் பெரியகடை கடற்கரைப் பகுதியில் ஒன்றுகூடி ஆர்வத்துடன் பார்த்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (10)

## கடற்படையின்...

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன், கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் இந்த நிகழ்வில கலந்துகொண்டனர்.

இதுவரை 600 இற்கும் மேற்பட்ட யாழ்.மாவட்ட மக்களுக்கு கடற்படை துணைப்படை பயிற்சி வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்கள் மீதான...

நேற்று பளையிலுள்ள அரசியற்துறைச் செயலகத்தில் யாழ்.மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இது தொடர்பாக விளக்கமளித்தார்.

யாழ். குடாநாட்டில் அண்மை நாட்களாக மீனவர்கள் மீது இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. நேற்றைய தினமும் வடமராட்சிப் பகுதியில் மீனவர்கள் இராணுவத்தால் தாக்கப்பட்டுள்ளனர். இதைவிட அங்குள்ள வர்த்தகர்களின் பெயர்களை இராணுவத்தினர் சேகரித்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் இல்லையேல் மக்கள் கிழர்ந்தெழும் நிலை ஒன்று உருவாகும்.

இதைவிட யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும் எமக்கும் இடையே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்புக்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை இராணுவத்தினர் அமுல்படுத்தாத அதேவேளை - அதற்கு எதிரான செயற்பாட்டிலேயே ஈடுபட்டனர்.

அரசியல் போராளிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டதுடன், கொலை மிரட்டல்களும் விடுக்கப்பட்டன. எனவே, இந்த விடயம் தொடர்பாக நாம் எமது தலைமைப்பீடத்துக்கு தெரிவித்ததையடுத்து, தலைமையின் அழைப்பின் பெயரிலேயே நாம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியைவிட்டு வெளியேறி எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தோம். நாம் மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வது என்பது உயர்மட்டப் பேச்சுக்களிலேயே பேசித் தீர்க்கப்பட வேண்டிய விடயம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொலன்ட் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்குப் பகுதி...

வெலிக்கந்த, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

கருணா குழுவின் செயற்பாடு உள்ளதாகக் கருதப்படும் மேற்படி பகுதிகளுக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி இந்தப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் தொடர்பாக இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது.

அத்துடன் சமீபத்திய சம்பவங்களால் சோர்வுற்றிருந்த படையினருக்கு உற்சாகமூட்டும் வகையிலும் பல்வேறு இடங்களிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டங்களில் இராணுவத்தளபதி உரையாற்றியிருந்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட -

ஆயுதங்கள் உட்பட இராணுத்தினருக்கான உபகரணங்கள் யாவும் உரிய வகையில் பெற்றுக்கொடுக்கப்படும். கிழக்கில் பொதுமக்களின் பிரதேசத்தில் இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படும்போது பதில் தாக்குதல்களை கவனமாக மேற்கொள்ளுமாறும் -

காட்டுப்பகுதியில் வைத்துத் தாக்குதல்கள் நடத்தப்படுமானால் அதற்குப் படையினர் கடும் பதில் அடி கொடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

## இளைஞர்...

பட்டவராவார்.

இவர் தனது கடையில் வேலை செய்துகொண்டிருந்தவேளையிலேயே கடைக்குள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் இருதயபுரத்தைச் சேர்ந்த வேலு கிசோக்குமார் (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பத்து வருடங்களாக இருதயபுரத்தில் வசித்துவந்தவர் என்பதுடன் கராத்தே, ஜிம்னாஸ்ரிக் கலைகளில் இவர் நன்கு பயிற்றப்பட்டவர்.

## சுனாமி நிதியில்...

மட்டுமே செலவிடப்பட்டது.

இந்தத் தொகை திரட்டப்பட்டதற்கான எதுவித முறையான கணக்குகளையும் அரசாங்கம் வைத்திருக்கவில்லை. இந்தத் தொகையின் பெரும் பகுதி பயன்படுத்தப்படாமல் அரசாங்க வைப்புத் தொகையில் வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், அரசாங்க துறைகள், அரச நிறுவனங்கள் திரட்டிய சுனாமி நிதிக்கு முறையான கணக்குகள் எதுவும் இல்லை.

இவ்வளவு நிதி திரட்டப்பட்டும் தேசிய அனர்த்த முகாமைத்துவ சபை அல்லது அனர்த்த முகாமைத்துவ சபை அமைக்க எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

384 அரச சார்பற்ற நிறுவனங்கள் மீளமைப்புப் பணிகளுக்காக 1321 மில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான நிதி திரட்ட ஒப்புக்கொண்டன.

ஆனால், அரசாங்கத்துக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகாததால் மீளமைப்புப் பணிகள் தொடங்கப்படவே இல்லை. அப்படி புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட பணிகளைத் தொடங்கவில்லை.

கல்முனை பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுமார் 10 இலட்சம் வரையிலான உதவிப்பொருட்கள், 65 மின்பிறப்பாக்கிகள், 78 நீர்த்தாங்கிகள், 88 முகாம் கூரைகள், நீரிறைக்கும் இயந்திரம் உள்ளிட்டவையும் காணாமற் போயிருக்கின்றன.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் 13லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கூப்பன் அனுமதியும் தகுதியற்ற தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் சுனாமி ஏற்பட்ட நாளிலிருந்து 2 நாட்கள் வரை வந்திறங்கிய பொருள்கள் தொடர்பாக சுங்கத் துறையினர் எதுவித முறையான ஆவணங்களையும் வைத்திருக்கவில்லை.

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு 686 பொதிகலன்களில் அனுப்பி வைக்கப்பட்ட உதவிப்பொருட்கள் கொழும்பு துறைமுகத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

சுனாமி பணிகளுக்காக 5G வாகனங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இவற்றில் 207 அரசாங்கப் பணிகளுக்கும், 290 அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், 9 இதர நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதை இறக்குமதி செய்ததிலும் சட்ட ரீதியான பிரச்சினைகள் உள்ளன.

சுனாமியால் சேதமடைந்த வீடுகள் எண்ணிக்கை 48ஆயிரத்து 9.. ஆக இருந்தபோதும், இரண்டு தமான வீடுகள் மட்டுமே ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை மீளமைக்கப் பட்டுள்ளன. ஆனால், 71 வீதமான வீடுகள் மீளமைப்புக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கு தமிழ்...

மருந்துக்கடைகள், ஏனைய வியாபார நிறுவனங்கள், சந்தைகள் என்பவற்றையும் அன்றையதினம் முழுமையாக மூடி இந்தப்பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், ஏ 9 பாதையூடாக பிரயாணம் செய்யும் பயணிகள் அன்றைய தினம் தங்களது பயணத்தை தவிர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், பாடசாலைகள் வழமை போன்று இடம்பெறும். பாடசாலை முடிவடையும் வேளை அல்லது பாடசாலைகளுக்கு வாகனங்கள் வரும்போது ஆசிரியர், மாணவர்கள் அனைவரும் அவ்வாகனங்களில் நிகழ்வுக்குச் செல்ல அனுமதிக்கவும். மதுபானசாலைகள் மற்றும் படமாளிகைகள் யாவும் மூடப்படவேண்டும்.

அன்றைய தினம் மக்கள் நிகழ்வில் கலந்துகொள்ளும் வகையில் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிவடக்கு, வலிகிழக்கு போன்ற பிரதேசங்களுக்கு வாகன ஒழுங்குகள் பூரணமாக செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வு இடம்பெறும் மைதானத்தில் நான்கு பாதைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் குடிநீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் 7.30 மணிக்கு முன்னர் வீடுகளுக்குச் சென்றடையக் கூடியவகையில் வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து மக்களும் அலைகடலென அணிதிரண்டு உரிமைக் குரலை வெளிப்படுத்தி போரைத் தவிர்த்து உரிமைகளை வென்றெடுப்போம். இவ்வாறு பல்கலைகழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
LECTURES BY:
MR.M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
27.09.2005 செவ்வாய்
மாலை 5.30 மணி
Tuesday
Thursday } 5.30 P.M - 6.30 P.M
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 25.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.